விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 19 வெள்ளிக்கிழமை (01.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்'
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நாவின் தலையீட்டை எதிர்க்க

# பொன்சேகாவுக்கு அரசு அழைப்பு!

## ஒன்றிணைந்த அமைப்பை உருவாக்கவும் முயற்சி

(கொழும்பு), இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஜெனிவா தீர்மானத்தை புறக்கணிக்கும் வகையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்ட எதிர்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்குதல், போர்க் குற்ற விசாரணை, இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதை வலியுறுத்தும் ஜெனிவாத் தீர்மானத்தை ஒட்டுமொத்தமாக எதிர்ப்பதற்கும் அமெரிக்கா, இலங்கை அரசுக்குக் கொடுக்கும் அழுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும்,

ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தலைமையிலான (20ஆம் பக்கம் பார்க்க)

## சமகால நிலைமையை அறியவே யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளேன்

### - சிங்கப்பூர் அமைச்சர் சண்முகம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கு அரசாங்கம் தான் உதவி செய்ய முடியும். என்னால் நேரடியாக உதவி செய்ய முடியாது. உங்களுடைய தேவைகளை எனது நாட்டின் அரசாங்கத்திடம் எடுத்துக் கூறி உதவிகளைப் பெற்றுத்தர முயற்சிக்கிறேன் என சிங்கப்பூர் நாட்டின் வெளிவிவகாரத் துறை மற்றும் சட்டவாக்கல் துறை அமைச்சர் கே.சண்முகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்த சிங்கப்பூர் வெளிவிவகாரத்துறை அமைச்சர் சண்முகம் யாழ். மாநகர சபைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக யுத்த அழிவுகளை சந்தித்து வந்த வடக்கு-கிழக்கில் தற்போது என்ன நடக்கிறது? இங்கு என்ன நிலைவரம் என்பதை அறிந்து செல்லும் நோக்கத்துடனேயே (20ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்றை சரியாக படிக்க வேண்டும் வடக்கும் கிழக்கும் தமிழரின் பூர்வீகம்

### மேதானந்த தேரருக்கு கூட்டமைப்பு கண்டனம்

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி என்று உரிமை கோருவதற்கு எவ்வித சான்றுகளோ, ஆதாரங்களோ கிடையாது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்திருந்த கருத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரரின் கூற்றுத் தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா,

வடக்கு-கிழக்கில் பௌத்த ஆதிக்கத்தை நிலைநிறுத்தி தமிழ் மக்களை அழிக்கும் முயற்சியில் எல்லாவெல மேதானந்த தேரர் வெளிப்படையாகவே ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், எல்லாவெல மேதானந்த தேரரின் கருத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் விரைவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிராக 8 இணையத்தளம் அதனை நடத்துபவர் ஒருவரே -ஜனாதிபதி

இலங்கைக்கு எதிரான செய்திகளை வெளியிடும் 8 இணையத்தளங்கள் இருப்பதாகவும் அவற்றை ஒருவரே நடத்தி வருவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாய்லாந்தில் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து சென்றுள்ள ஜனாதிபதி பாங்கொக் நகரில் இருக்கும் இலங்கையர்களை சந்தித்து, அவர்கள் மத்தியில் பேசும்போதே இதனைக் கூறியுள்ளார். அங்கு உரையாற்றிய அவர், 30 வருட பயங்கரவாதப் போரை முடிபுக்கு கொண்டு வந்து சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து இனங்களும் ஒன்றாக வாழக்கூடிய சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 8.3 ஆக உள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் இந்த வளர்ச்சி 8 வீதமாக இருந்து வருகின்றது. அத்துடன் வடக்கின் பொருளாதார வளர்ச்சி 22 வீதமாக அதிகரித்துள்ளது.

இதன்மூலம் அரசாங்கம் வடக்கில் எந்தளவான பணிகளை மேற்கொண்டுள்ளது என்பதை அறிய முடியும் எனினும் இலங்கை முன்னேறி செல்லும் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு சர்வதேசத்தின் ஆலோசனைகள் தேவையில்லை

### அமைச்சர் ஹெகலிய அதட்டல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையோ அல்லது அவரின் குழுவினரோ இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு எவ்விதமான ஆட்சேபனையும் கிடையாது.

ஆனால் இலங்கையின் உள்நிர்வாகங்களில் தலையிடுவதாகவோ அல்லது அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகவோ அவர்களின் விஜயம் அமையக் கூடாது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சரவையின் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல, இலங்கையின் உள்ளார்ந்த நிர்வாக கட்டமைப்புக்கு சர்வதேசத்தின் ஆலோசனைகள் தேவையில்லை எனவும், சர்வதேச நாடுகள் நாட்டின் உள்



ளக நிர்வாகங்களில் தலையிட்டு நீதிமன்ற பொறிமுறையை இழிவுபடுத்துவதை அனுமதிக்க முடியாது என்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுடனான இருதரப்பு சந்திப்பை புறக்கணிக்கும் இந்தியா

(புதுடில்லி)

போர் முடிபிற்கு கொண்டுவரப்பட்ட பின்பு இலங்கை அரசாங்கத்துடனான இரு தரப்புச் சந்திப்புக்களை திட்டமிட்டு இந்தியா புறக்கணித்து வருவதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தெற்காசிய நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்புச்சந்திப்புக்களை நடத்தியுள்ளபோதும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மட்டும் சந்திக்கவில்லை என அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அதி உயர்மட்ட இருதரப்புச் சந்திப்புக்களை நடத்துவதில் இந்தியா பாராமுகமாக இருந்துள்ளதாகவும் ஆதாரத்துடன் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதில் தெற்காசிய நாடுகளின் தலைவர்களுடன் இந்தியப் பிரதமர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை கடந்த இரண்டு ஆண்டுகளில் பல முறைநடத்தியுள்ளபோதும் இலங்கை ஜனாதிபதி மட்டும் புறக்கணிக்கப் பட்டுள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் மாலைதீவு (19ஆம் பக்கம் பார்க்க)



நியூ நெல்சன் லேணர்ஸ்

கிளை திறப்பு விழா

நியூ நெல்சன் லேணர்ஸ்
இல. 89, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021-2222 4527
021-4923113
0777-906064, 021-222 9109

வல்வெட்டித் துறையில் நவீன சந்தை (பஸ் நிலையம் முன்பாக)

இன்று 01.06.20... வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

...ரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



நவீன சந்தை
வல்வெட்டித்துறை.
021-4923733

(8547)

நடுவு நிலை த... றி காக்கும் உங்கள் நாளிதழ்

## மக்கள் வங்கியின் 365 நாள் வங்கிச் சேவை

(யாழ்ப்பாணம்)

அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் அனைத்து வாடிக்கையாளர்களதும் நன்மை கருதி, யாழ்.பிராந்திய மக்கள் வங்கியின் கன்னாதிட்டிகிளை வருடத்தின் 365 நாட்களும் இலகு வங்கிச் சேவையை வழங்குவதற்காக நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை முதல் திறந்திருக்கும்.

365 நாட்களும் தங்க நகை அடகு வைத்தல், மீளப்பெறல் போன்ற அடகுச் சேவையும் நடைபெறும் என பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மக்கள் வங்கி தனது 51 ஆம் ஆண்டு நிறைவை அடுத்த மாதம் 1 முதலாம் திகதி கொண்டாடவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ந-8,11)

## அதிபராக நியமனம்

(யாழ்ப்பாணம்)



அமல மரித்தியாகிகள் சபையின் (O.M.I) குரு அன்ரனி பொன்சியன் இன்று திருகோணமலை சென். ஜோசப் கல்லூரிக்கு புதிய அதிபராக நியமனம் பெறுகின்றார். (ந-8)

## உரிமம் பெறாத விடுதிகளை மூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை எல்லைக்குள் இயங்கி வரும் இதுவரை உரிமம் பெறாத / உரிமத் துக்கு விண்ணப்பிக்காத சகல விடுதிகளும் இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முதல் உள்ளு ராட்சி அதிகாரச் சட்டத்திற்கு அமைய மூடப்படும் என யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித் துள்ளார். (ந-8)

## விருது வழங்கலும் திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத் தின் விருது வழங்கும் வைபவம் நாளை சனிக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் அன்றைய தினம் இலங்கைத் திறந்த பல்கலைக்கழக கிளிநொச்சி கற்கை நிலையத்தின் புதிய கட்டட திறப்பு விழா பி.ப 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்புதிய கட்டிடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் திறந்து வைக்கவுள்ளார் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந-8)

## யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி யின் அதிபராக திருமதி எம்.விமலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனத்தை வடக்குமாகாணக் கல்வி அமைச்சின் செயலா ளர் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் சன்மார்க்க வித்தியாலய அதிபராக இருந்த இவர் இன்று அல்லது எதிர்வரும் 4ஆந் திகதி தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வார்.

யாழ்.இந்துமகளிர்கல்லூரியின் அதிபராக இருந்த திருமதி எஸ்.பேரின்பநாதன் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு இடமாற்றப் பட்டதையடுத்து புதிய அதிபர் நியமிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

செல்லா சினிமா- யாழ்ப்பாணம்

இன்று முதல்

சிவகார்த்திகேயன், ஆத்மியா மற்றும் பலர் நடிப்பில்



இலங்கை இந்திய ஒரேநாள் வெளியீடு

10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

# கட்சி மாநாட்டை குழப்பியமையால்தான் சம்பந்தன் பிள்ளையானை சந்திக்கவில்லையாம்!

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழரசுக்கட்சி மாநாடு முடிந்ததும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திர காந்தனைச் சந்தித்து அவரின் கடிதம் தொடர் பில் கலந்துரையாட வேண்டும் என கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தீர்மானித் திருந்ததாகவும், ஆனால் தமிழரசுக் கட்சியின் மாநாட்டின் போது அவர்கள் ஏற்படுத்திய குழப்ப நிலையை அடுத்து சம்பந்தன் தனது முடிவை மாற்றிக் கொண்டதாகவும் மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் மட்டக்களப்பில் நடத்திய ஊடகவியலாளர் சந் திப்பின் போதே இவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் எவரையும் அழைத்துப் பேசத் தயாராக இருக்கின்றோம். தமிழரசுக்கட்சி யின் மாநாடு முடிவடைய கிழக்கு மாகாண முதல மைச்சருடன் பேசுவதற்கு சம்பந்தன் தீர்மானித் திருந்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 வது தேசிய மாநாட்டைக் குழப்புவதற்கும், கறுப்புக் கொடிகளை காட்டுவதற்கு காரணமாக இருந்தவர்கள் கிழக்கு மாகாண முதலமைச் சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமை யிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினராகும். இந்தமாநாடானதுமட்டக்களப்பு மக்களுக்கு இன்னுமொருவகையில் எழுச்சியை கொடுத்திருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் எங்கள் தாய்க் கட்சி என்பதனை தமிழ் மக்களுக்கு உணரச் செய்துள்ளது.

இந்த மாநாட்டை ஏற்பாடு செய்யும் போது பல இடங்களிலிருந்தும் பல விதமான துண் டுப்பிரசுரங்கள் வெளிவந்தன. குறிப்பாக எமது மாவட்டத்தில் பிரதேச வாதத்தை தமது ஆயுதமாக கொண்டு செயலாற்றி வரும் சிலர் இத்தகைய துண்டுப்பிரசுரங்களை வெளி யிட்டிருந்தனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி யினர் நடத்திய மாநாட்டுக்காக சிங்கள மக் களை பொலநறுவையில் இருந்தும் அம் பாறையில் இருந்தும் பேருந்துகளில் அழைத்து வந்திருந்தனர்.

மாநாட்டிற்கு சில தினங்களுக்கு முன்னர் மாதர் சங்கங்களுக்கு தையல் இயந்திரங் கள், சேலைகள் வழங்கப்பட்டு அவர்களும் அழைத்து வரப்பட்டிருந்தார்கள்.



அதிகாரிக்ளையும் நிர்ப்பந்தப்படுத்தி அழைத்தார்கள். எப்படி ஆயினும் அவர்களின் மாநாட்டை நாங்கள் குழப்பவில்லை.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் ஜனநாய கம் இல்லை என்பதை நாங்கள் நடத்திய மாநாட்டுக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் ஏற்படுத்திய குழப்பங்கள் வெளிப் படுத்தி நிற்கின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட் டின் அதன் தலைவர் சம்பந்தனுக்கு மக்கள் வழங்கிய வரவேற்பு கிழக்கு மாகாண முதல மைச்சருக்கு வழங்கப்பட்டிருக்குமா எனக் கேட்டால் நிச்சயமாக இல்லை என சீ. யோகே ஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ந-8,11)

## தேர்த்திருவிழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை துணைவி அருள்மிகு தெவிண்டிரப்பாய் முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழா நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியள வில் வசந்த மண்டப பூசையுடன் ஆரம்ப மாகவுள்ளது.

இத்திருவிழாவன்று 'மகோற்சவத்தில் இரதோற்சவம்' எனும் விடயத்தில் ஆசிரியர் மதுரகவி. காரை எம்.பி. அருளானந்தன் அவர்களின் சிறப்பு சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (ந-8)

## கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுத சுவாமி (உபய கதிர்காமம்) ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று வெள் ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு நடை பெறவுள்ளது. (ந-8)

## ஹண்டர்-மோ.சைக்கிள் விபத்து இளைஞர் படுகாயம்

(கரவெட்டி)

ஹண்டர் வாகனமும் மோட்டார்சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியள வில் கரவெட்டி கோவிற் சந்தைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளினைச் செலுத்தி வந்த கரவெட்டி மத்தியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரஜிகரன் (வயது 21) என்ற இளைஞரே படுகாய மடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இளைஞரை மோதிய ஹண்டர் வாகன சாரதி நெல்லியடி பொலிசாரால் கைது செய் யப்பட்டதோடு, ஹண்டர் வாகனமும் மோட்டார் சைக்கிளும், நெல்லியடிப் பொலிஸ் நிலையத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (ந-24)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/சன்மார்க்க மகா வித்தியாலய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்தும், வகுப்பு-I மற்றும் 2-I ஐ ச்சேர்ந்த ஆசிரியர்களிடமிருந் தும் கோரப்படுகின்றன.

அதிபர் சேவை உத்தியோகத்தர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து மாத்திரமே ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

அதிபர் சேவையில் விண்ணப்பிப்பவர்கள் தற்போதைய பாடசாலையில் மூன்று வருடங்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டும். சேவை நீடிப் பில் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண் ணப்ப படிவத்தை பெற்று யூன் 06 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜ் கேட்டுக்கொள்கிறார். (ந-8)

## பொன் விழா நிகழ்வு

(காரைநகர்)

மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலய பொன்விழா கொண்டாட்ட நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் ர.யோகானந்தராஜா தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ் விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.வேதநாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-280)

## இதய அஞ்சலி

### திருமதி மஞ்சுளா உதயகுமார்

(லிகிதர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை)



அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் ஆற்றுப்படுத்தலில் துர்க்காபுரம் மக ளிர் இல்லத்தில் வளர்ந்து கடந்த பதினாறு ஆண்டுகளாக எமது தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி எல் லோர் உள்ளங்களிலும் நிறைந்த, இனிய ஆத்மாவின் பிரிவு குறித்து மிகுந்த துயர் அடைகிறோம். அன் னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வணங்குகிறோம்.

ஆறு. திருமுருகன் (தலைவர்),
நிர்வாக சபை

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr. P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205, 0214922403

மீண்டும் யாழில்

28.05.2012 முதல் 03.06.2012 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுக மாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன் (பழைய கமால் லொஜ்)

392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

...ந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

...ர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)

(C-112)

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் துன்பமும்

ஒரு சமயம் சோளக்கொல்லையில் ஒருவன் காவல் காத்துக் கொண்டிருந்தான். பொதுவாகச் சோளக்கொல்லையில் ஒரு பொம்மையைக் காவலுக்கு வைப்பது வழக்கம்.

"பொம்மை எதற்கு? நாம் போய் அங்கே இருந்து கொள்வோமே!" என்று அவன் நினைத்தான் போலிருக்கிறது! காவலுக்குப் போனவன் கவனமாக இருந்து காவல் காக்க வேண்டுமல்லவா? ஆனால், அவன் அப்படிச் செய்யவில்லை. பொம்மை மாதிரியே இருந்துவிட்டான். தூக்கம் அவனை பற்றிக் கொண்டது. அவன் தூங்கிக் கொண்டான்.

அந்த நேரம் பார்த்து அந்தக் கொல்லையை மேய்வதற்கு ஒரு நந்தி வந்தது. எங்கிருந்து வந்தது? கைலாயத்தில் இருந்து வந்தது! சிவபெருமானிடம் இருக்குமல்லவா, அந்த நந்தி! அதுதான் விருப்பம் போல் சோளக் கொல்லையை மேய ஆரம்பித்தது.

இவன் திடீரென விழித்துக் கொண்டான். நந்தியைப் பார்த்தான். விரட்டிப் பிடிப்பதற்காக அதன் அருகில் ஓடினான். அதற்குள் விருட்டென்று போய் விட்டது நந்தி.

"ஆகா! ஏமாந்து போய்விட்டோமே! அது மறுபடியும் இங்கே வரும்தானே! அப்போது பார்த்துக் கொள்ளலாம்" என்று நினைத்தான்.

மறுநாள் தூங்குவதுபோல பாவனை செய்து கொண்டிருந்தான். அப்போது அவன் எதிர்பார்த்தது போலவே அந்த நந்தி வந்தது. இவன் மெதுவாக அதன் அருகில் சென்றான்.

இவன் அருகில் சென்ற சமயத்தில் அது இவனைப் பார்த்து விட்டது. விட்டென்று மேலே கிளம்பியது.

இவன் ஒரே தாவாகத் தாவி அதன் வாலை எட்டி அப்படியே பிடித்துக் கொண்டான். அது பறந்து போகவும் இவன் அதன் வாலைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டே போகிறான். நேராக நந்தியுடன் கைலாயம் போய்ச் சேர்ந்தான்.

அங்கு பார்வதி பரமேஸ்வரரைப் பார்த்து, "உங்களுடைய நந்தி என் சோளக் கொல்லையை அழித்து எனக்குப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது. இது நியாயமா?" என்று வினவினான்.

அதற்கு நஷ்ட ஈடாக ஒரு பை நிறைய தங்கக்கட்டிகளைப் போட்டு அவனிடம் அவர்கள் கொடுத்தார்கள். அவன் அதை வாங்கிக் கொண்டான். பின் நந்தியே அவனைப் பூலோகத்திற்கு கொண்டு வந்து சேர்த்தது.

இவன் வீடு வந்து சேர்ந்தான். பேசாமல் சந்தோஷமாக வாழ வேண்டியதுதானே! அதைவிட்டு விட்டான். "அவ்வளவு தாராளமாகத் தங்கக் கட்டிகளை அள்ளிக் கொடுத்தார்களே! அவை உண்மையி லேயே தங்கக்கட்டிகள் தானா... இல்லை வேறு ஏதாவதா?" என்ற சந்தேகம் அவனுக்கு வந்துவிட்டது.

இவன் மனிதன் தானே... இயல்பாக வரக்கூடிய சந்தேகம் தான். ஒரு தங்கக் கட்டியை எடுத்துக்கொண்டு அதைப்பற்றிய விபரம் தெரிந்த தன் நண்பன் ஒருவனிடம் சென்றான். "இது என்ன நிஜமான தங்கம் தானா, பார்த்துச் சொல்!" என்றான்.

நண்பன் தங்கத்தைச் சோதித்துப் பார்த்தான். அது நிஜமான தங்கம் தான் என்பதைப் புரிந்து கொண்டான். இருந்தாலும் அந்த உண்மையை இவனிடம் சொல்லவில்லை.

"இது தங்கம் இல்லை... பித்தளை... இப்படி உன்னை ஏமாற்றியது யார்?" என்று மிகவும் தந்திரமாகக் கேட்டான். இவன் அப்பாவித்தனமாக எல்லாவற்றையும் விபரமாகக் கூறினான். பின் "சரி வருகிறேன்" என்று நண்பனிடம் விடை பெற்று வீடு திரும்பினான்.

மறுபடியும் கடவுளிடம் சென்று "இது நியாயமா?" என்று கேட்க முடிவு செய்தான். அன்றிரவும் நந்தி வழக்கம்போல அவனது வயலில் மேய்வதற்காக வந்தது. இவன் ஓடிச்சென்று அதன் வாலைப்பிடித்துக் கொண்டான். நந்தி பறக்க ஆரம்பித்தது. அப்போது அவனது காலில் கப்பென ஏதோ பிடிப்பதுபோல் தெரிந்தது. தொங்கியபடியே கீழே குனிந்து பார்த்தான்.

பார்த்தால்... அவனது நண்பன். இவன் காலைப் பிடித்துக்கொண்டு தொங்கியபடி வந்து கொண்டிருந்தான். அவனுக்கும் தங்கக் கட்டியைப் பெற வேண்டும் என்று ஆசை.

நடுவானில் நந்திபோய்க் கொண்டிருந்தது. அப்போது காலைப் பிடித்திருந்தவன் வாலைப் பிடித்திருந்தவனைப் பார்த்து "அது சரி... உனக்கு எவ்வளவு தங்கம் கொடுத்தார்கள்?" என்று கேட்டான். அதற்கு வாலைப் பிடித்திருந்தவன் "இதோ இவ்வளவு இருக்கும்!" என்று இரு கைகளையும் விரித்துக் காட்டினான். அவ்வளவுதான்! இரண்டு பேரும் பொத்தென்று பூமியில் வந்து விழுந்தார்கள்! நந்தி மேலே பறந்து போய்விட்டது.

இந்தக் கற்பனைக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நீதி இதுதான்:

வாலைப்பிடித்தவன்... உண்மையைச் சந்தேகப்பட்டான். காலைப் பிடித்தவன்... பேராசைப்பட்டான்.

உண்மையைச் சந்தேகப்படுபவர்களுக்கும்- பேராசைப்படுபவர்களுக்கும் இதுபோன்ற கதிதான் ஏற்படும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தீவகம் தெற்கு பிரதேசத்தின் ஒருங்கிணைந்த அபிவிருத்தித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் முதன் முதலாக தீவகம் தெற்கு பிரதேசம் உட்பட மூன்று பிரதேசங்களில் உள்ளூர் அதிகாரசபை, பிரதேச செயலகம் என்பன இணைந்து துறைசார் நிறுவனங்களின் நெருங்கிய ஒத்துழைப்புடன் தீவகம் தெற்கு பிரதேசத்தின் ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுகின்றது என வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா தெரிவித்துள்ளார்.

இவ் ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித்திட்டமானது உள்ளூராட்சிக்கான தேசிய கொள்கைப் பிரகடனம் உள்ளூராட்சி மறுசீரமைப்பு ஆகிய சட்ட உசாத்துணைகளுக்கு அமைய உள்ளூர் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

இதன் முதற்கட்டமாக பிரதேசத்தின் துறைசார் தற்போதைய நிலையை வெளிப்படுத்தும் சமூக பொருளாதார மூலவளத் திரட்டு தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக மூலவளத் திரட் டில் இனங்காணப்பட்ட பிரச்சினை களின் அடிப்படையில் நான்கு ஆண்டு திட்டமிடலுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு ஒப்படை க்க வேண்டும் என தீர்மா னிக்கப்பட்டது.

அத் திட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக ஒப்படைப்பது என துறைசார்ந்த திணைக்களங்களால் இணக்கம் காணப்பட்டது.

இத்திட்டத்தில் துறை சார்ந்த பிரச்சினைகளும் அதற்கான மூலகாரணங்களும் இனங்காணப்பட்டு அவை பிரச்சினை மரம் மூலம் விரிவாக ஆராயப்பட்டு ஒருங்கிணைந்த மூலகாரணியையும் வளங்களையும் ஒன்று சேர்த்து மாதிரி திட்டம் ஒன்றையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்டு துறைசார்ந்த நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் என வேலணை பிரதேச சபையின் செயலாளர் செ. ரமேஷ் தெரிவித்துள்ளார். (அ-7)

# ஆவணத்திரைப்பட விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் எம்.ஆர்.ரி.சி. ஆவணத்திரைப்பட விழா- 06 நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை இல 84, ஜூம்மா பள்ளி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பாலுமகேந்திராவின் இயக்கத்தில் உருவான கதை நேரம் எனும் தலைப்பில் சுஜாதா, பிரபஞ்சன், திலகவதி, சமுத்திரன், ஜெயந்தன், சுந்தர் ராமசாமி, மாலன், வாசந்தி, சிவசங்கரி, எஸ்.சங்கர நாராயணன், சூரியன் ஆகியோரின் கதை வசனத்தில் நிலம், ஒரு மனுசி, முக்கோண காதல் கதை, காத்திருப்பு, காயம், பிரசாதம், தப்புக்கணக்கு, நம்பிக்கை, பொன்னாசை, அம்மா, அப்பா, என் தாம்பத்திய நினைவுகள் போன்ற பன்னிரண்டு குறும்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இத்திரைப்பட விழாவில் திரைப்பட ஆர்வலர்கள், ஊடகத் துறை மாணவர்கள் பங்குகொள்ள முடியும் எனவும் மேலதிக தகவல்களுக்கு 021 222 9873 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் எனவும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் தே.தேவானந்தா அறிவித்துள்ளார். (அ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70-100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 60 | 100 |
| தக்காளி | 130 | 160 | 110 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 30-35 | 30 | 30 | 40 |
| கோவா | 50 | 70 | 60 | 70 |
| கரட் | 80 | 120 | 70 | 120 |
| பூசணி | 20-25 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 80 |
| வாழைக்காய் | 25-30 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 80-110 | 100-140 | 90 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 70 | 70 | 90 |
| பாகற்காய் | 80 | 160 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 70-80 | 90 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 | 80 |
| பயற்றங்காய் | 150 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | -- | 160 | 150 | 160 |
| பீற்றூட் | -- | 80 | 70 | 120 |
| கறிமிளகாய் | 70 | 120 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 200-220 | 300 | 200 | 240 |
| போஞ்சி | -- | 140 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 5-9 | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 140 | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 20 | 18-22 |

# இராசி பலன்

01.06.2012
(வைகாசி 19, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
துவாதசி பின்னிரவு 12.33 மணிவரை
சித்திரை பிற்பகல் 4.21 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
வைஸ்ணவ ஏகாதசி

**மேடம்** பொன்னான நாள், பொருள் வரவிற்கு அத்திவாரமிடுவீர்கள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், உடல் நலம் சீராகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரும், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** பொருளதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**கடகம்** தொல்லை கொடுத்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வருவர், மனையில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், தொழில் சம்பந்த மாக முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**கன்னி** இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், வாக்கு மேன்மையுண்டு, முயற்சிகள் கைகூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**துலாம்** சிந்தனை மிகுதியான நாள், உறவினர் நலன் கருதி கொள்கையை விட்டுக் கொடுக்கும் சூழ்நிலை அமையலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், திருமணத்தடை அகலும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும்.


**தனுசு** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**மகரம்** இனிய செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்தியுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள்.

**கும்பம்** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், தொலைபேசி வழித்தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள்.

**மீனம்** முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், ஆரோக்கியக் குறைவான நாள், பயணங்களின் போது நிதானம் தேவை, போசன சுகமுண்டு, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

வளவன்



# உயிர் மீண்ட காளை மாடு

17

யாழ்ப்பாண அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் உத்தரவின் பேரில் யாழ்.தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா தலைமையிலான பொலிஸ் குழு சென்ற ஜீப் யாழ்ப்பாணம் கொட்டடி மீன் சந்தைக்கு முன்பாக காளைமாடு கட்டப்பட்டிருந்த இடத்தில் நிறுத்தப்படுகின்றது.

காளைமாட்டைப் பார்ப்பதில் நிறைந்த சனக்கூட்டம். மிகப் பெரிய உருப்படியான அந்தக்காளையை தங்கள் கையடக்கத் தொலைபேசிக் கமராக்களுக்குள் அடக்கி கிளிக் செய்யும் முயற்சியில் பலர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

ஜீப்பில் இருந்து பொலிஸார் குதிக்க இவர்களும் காளை மாட்டை வேடிக்கை பார்க்க வருவதாகவே அங்கிருந்தவர்கள் கருதிக்கொண்டனர்.

பொலிஸார் ஒருவர் மாட்டின் உரிமையாளர் எங்கே என்று கேட்க அங்கு நின்ற ஒருவர் உரிமையாளராக தன்னை அடையாளம் காட்டிக்கொண்டார்.

**தடை உத்தரவும் பொலிஸ் பாதுகாப்பும்**

மாடு வெட்டுவதற்கு தடை செய்யப்படுகின்றது என்ற உத்தரவு அங்கு பிறப்பிக்கப்படுகின்றது. பொலிஸ் பிறப்பித்த தடை உத்தரவு காளைமாட்டின் உரிமையாளருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்த தடை உத்தரவு எதற்கானது என அவர் பொலிஸாரிடம் வினவினார்.

இறைச்சிக்காக வெட்டப்படும் காளைமாட்டை பொது இடங்களில் வைத்து காட்சிப்படுத்தியமை, மாட்டிறைச்சி விற்பனைக்காக துண்டுப்பிரசுரம் வெளியிட்டமை போன்றவை காரணமாகவே இத்தடை பிறப்பிக்கப்படுவதாக பொலிஸார் விளக்கமளிக்க,

நாங்கள் சட்டப்படி ஏலவிற்பனையில் இந்தக் காளை மாட்டை பெற்றுக்கொண்டோம். குறித்தகாளை இறைச்சிக்கு வெட்டப் படக்கூடியது என்ற சிபாரிசுக் கடிதத்தை கால்நடை உற்பத்தித் திணைக்கள டாக்டர் தந்துள்ளார் என தன் பக்கத்து நியாயங்களை மாட்டின் உரிமையாளர் எடுத்தியம்பினார்.

இருந்தும் இந்தக்காளைமாடு வெட்டப்படுவதற்கு தடை விதிக்கப்படுகின்றது. கூடவே அதற்குப் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்படுகின்றது.

காளைமாட்டை வெட்டுவதா இல்லையா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கும் எனக் கூறிய பொலிஸ் அதிகாரி அங்கு நான்கு பொலிஸாரை காளையின் பாதுகாப்பு கடமையில் ஈடுபட உத்தரவிட்டார்.

சாதாரணமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மெய்ப் பாதுகாப்பு நடவடிக்கையில் இரண்டு பொலிசாரே ஈடுபடுவர். ஆனால் இந்தக் காளைமாட்டின் பாதுகாப்பில் நான்கு பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

கொட்டடி மீன் சந்தைக்கு முன்பாகக் கட்டப்பட்டிருந்த காளை மாடு பொலிஸாரின் பாதுகாப்புடன் மீன் சந்தைக்கு வடக்குப் பக்கமாகவுள்ள யாழ் மாநகர சபையின் கொல்களத்திற்கு அருகில் இருக்கக்கூடிய-மாடுகளை வெட்டுவதற்கு முன்னதாக 24 மணிநேரம் கட்டப்படும் இடத்திற்கு கூட்டிச்செல்லப்படுகின்றது.

திருநெல்வேலி கால்நடை உற்பத்தித் திணைக்களத்தில் இருந்து ஊரெல்லாம் அழைத்து வரப்பட்ட காளைமாடு இப்போது கொல்களத்துக்கு முன்னதான களத்தில் பொலிஸ் பாதுகாப்பில் தங்கவைக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம் நடக்கும் அதேநேரம் காளைமாட்டைக் காட்சிப்படுத்தியமை மாட்டிறைச்சி விற்பனைக்காக விளம்பரம் செய்தமை தொடர்பில் யாழ். தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேராவால் வழக்குப்பதிவு செய்யப்படுகிறது. (வழக்கு இல.


சமன் சிகேரா

B 224/12) 24 ஆம் திகதி மார்ச் 2012 இல் இவை நடைபெற, மறுநாள் 25ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை குடாநாட்டுப் பத்திரிகைகளிலும் குறிப்பிட்ட இணையத்தளங்களிலும் காளை மாட்டை வெட்டுவதற்குத் தடை யென்ற செய்தி வெளிவர அந்தச் செய்தியைப் பார்த்தவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர். கூடவே வலம்புரி ஆசிரியர் பீடத் தொலைபேசி ஒலித்தபடியே இருந்தது. காளை மாடு வெட்டப் படுவதற்குத் தடை என்ற செய் திக்கு மகிழ்வைத் தெரிவிப்பதில் கரிசனை கொண்டிருந்தனர்.

**விளக்கம் கேட்டு கடிதம்**

யாழ்.அரச அதிபரின் கோரிக்கையின் பேரில் காளைமாட்டை வெட்டுவதற்கு தடைவிதிக்கப்பட்டதை அடுத்து காளை மாட்டின் உரிமையாளர் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். காளை மாட்டை வெட்டுவதற்கு தடைசெய்தமை சட்டத்திற்குப் புறம்பானதென்றும் காளை மாட்டை வெட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதும் அவரின் மனுவின் கோரிக்கையாக இருந்தது. இவ்வழக்குத் தாக்கலை அடுத்து காளை மாடு வெட்டுவதை தடுத்ததற்கான விளக் கத்தைக்கேட்டு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றால் யாழ். அரச அதிபருக்கும் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதி காரிக்கும் நோட்டிஸ் அனுப்பி வைக்கப்பட்டதுடன் உரிய விளக்கத்தை 30.03.2012 அன்று நீதிமன் றில் சமர்ப்பிக்குமாறும் கட்டளையிடப்பட்டது.


இமெல்டா சுகுமார்

நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம் யாழ்.அரச அதிபர் பின்வருமாறு தனது விளக்கத்தை நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

**காளைமாடு வெட்டுவதற்கான தடை**

பதிவாளர்,
நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆகிய எனக்கு இந்துக் குருமார் ஒன்றியம் ஊடாகவும், நகுலேஸ்வர ஆலய நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பித்த அந்தணர்களுடைய கோரிக்கைக்கு இணங்கவும் மற்றும் இந்து அமைப்புக்களினாலும்,இந்து மக்களின் பொது வேண்டுகோளுக்கிணங்கவும் இந்துக்களின் புனித சின்னமாக போற்றப்படும் காளை மாடு (நந்தி) வெட்டுவதற்கு எம்மால் யாழ்.பொலிஸார் மூலம் இடைக்கால தடை விதிக்கப்பட்டது.

மேற்படி காளை மாட்டை உரியவரிடம் இருந்து மீளப்பெற்று அவருக்கு ஏற்பட்ட கொள்வனவுச் செலவை மீளக்கொடுப்பனவு செய்வதற்கும், உரிய ஏற்பாடுகளை செய்யும் முகமாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ஊடாகப் புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சு செயலாளருக்கும் இனவிருத்திக்காக கொள்வனவு செய்யப்பட்ட இந்தக் காளையைத் தொடர்ந்தும் பாராமரித்தல் செய்வதற்கான ஏற்பாடுகளுக்காக வடக்கு மாகாண பிரதம செயலாளரிடம் கோரிக்கையையும் மற்றும் வயதுமுதிர்ந்த இந்தக் காளையை இறைச்சிக்காகப் பாவிப்பதற்குப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கையினை பெறுவதற்கும் எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். வணிகர் கழகம் இதற்கான ஏலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கொடுப்பனவை வழங்க தயாராக இருப்பதாகவும் இதனை மீள கால்நடை வைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் கீரிமலை நகுலேஸ்வரர் கோவிலுக்கு ஒப்படைப்பதற்கும் இதனை பராமரிப்பதற்கும் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் நிதிஉதவிக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரியுள்ளனர்.

மேலும் சமய நம்பிக்கைக்கு அமைய இனிவரும் காலங்களில் இவ்வகையான விளம்பரங்களை வழங்கி இறைச்சிக்காக காளை மாடுகளை வெட்டுவது பசு வதை தவிர்ப்பது போல தவிர்க்க வேண்டும் என நீதிமன்றம் எச்சரிக்கை செய்யவேண்டும் எனவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

(இது 29.03.2012 அன்று திகதியிடப்பட்டு பதிவாளர், நீதவான் நீதிமன்றம் யாழ்ப்பாணம் எனும் முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்ட விளக்கக்கடிதம். கடிதத்தில் உள்ளவாறு இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

ரூபினி வரதலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர்
யாழ்.மாவட்டம்


ஒப்பம்:திருமதி இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்
யாழ்.மாவட்டம்.

(திங்கள் வளரும்)

விதுரன்

# கைது செய்யப்பட்ட புலிகளை விரைவாக விடுவிக்க முடியாது

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் தொடர்பாக விரைவான நீதித்துறை செயற்பாடுகள் தேவை என அமெரிக்கா கூறியுள்ளமை குறித்து ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்துரைக்கையில்,

இலங்கை அரசாங்கம் இவ்விவகராம் தொடர்பாக செயற்றிட்டமொன்றை கொண்டு அதன்படி செயற்பட்டு வருகின்றது.

விரைவாக விடுதலை செய்ய வேண்டுமென இத்தரப்பினரின் கோரிக்கையை அமுல்படுத்துவதனால் ஸ்தாபிக்கப்பட்ட முறைமையொன்றிலிருந்து விலகி மற்றொரு ஒழுங்கில்லாத முறையொன்றை பின்பற்ற வேண்டியிருக்கும்.

செயற்றிட்டமொன்றை கொண்டிருப்பது குறித்த கேள்விக்கு இடமில்லை. ஏனெனில் அப்படி இல்லையெனில் ஆயிரக்கணக்கானோர் விடுதலை செய்யப்பட்டிருக்கமாட்டார்கள்.

பேசப்படும் இந்நபர்கள் கைது செய்யப்பட்ட அல்லது அரசாங்கத்திடம் சரணடைந்த தீவிரமான பயங்கரவாதிகள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன,

சில தரப்பினர் இச்செயன்முறையை விரைவுபடுத்தக்கோருகின்றார்கள் என்றால் அவர்கள் நீதித்துறை செயற்பாடுகளை மௌனமாக்குமாறு கோருவதை போன்றே உள்ளது.

விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் தொடர்பாக ஆயிரக்கணக்கான வழக்குகள் உள்ளதாகவும் இவ்வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் தனித்தனியாக கையாள வேண்டியிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)


இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



ஏழாம் திருவிழா (01.06.2012)

இணுவையம்பதியில் வீற்றிருக்கும் கருணைக் கந்தா
உன்பாதம் மலரன்றி உபசாந்த நிலைதருதற்கு
உற்ற துணை பிறிதொன்றில்லை
உன் நாம ஜெபமன்றி உழல் மனம் அடங்கிட
பிறிதொரு உபாயமுமில்லை
உன் கருணையில்லையேல் என் கவலை தீராது
உண்மை இதில் ஐயம் இல்லை
பாராமுகம் செய்திடில் பக்தரும் ஏசுவார்
பண்டிதரும் பழி கூறுவார்
கன்னியர் இருவருடன் காட்சிதந்து
எமையாளக் கடாச்சம் வைத்து
அருளல் வேண்டும்
தண் இணுவைத் தலம் தனிலமர்ந்து
அன்பர்க்கு கருணை மழை பொழி தெய்வமே போற்றி போற்றி

(சி-081)

7ஆம் திருவிழா உபயகாரர்


# இந்திய வீட்டுத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்

## சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்த கால யுத்தத்தால் அனைத்து மக்களின் வீடுகளும் அழிக்கப்பட்டு விட்டன. முற்றாக அழிந்து போன பூமியிலேயே மக்கள் மீள்குடியேறினர். அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் இருபத்தைந்தாயிரத்திற்கும் அதிகமான வீடுகள் யுத்தத்தால் அழிந்து போனது என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்கவின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

கிராமத்திற்கொரு வீடு எனும் விசேட வீடமைப்பு கருத்திட்டத்தினை கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வன்னி மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் மிக முக்கியமானது வீட்டுப்பிரச்சினை. ஆனால் மீள்குடியேற்றத்தின் பின் இன்று வரை 8 ஆயிரத்து 800 வரையான வீடுகளே அமைக்கப் பெற்றுள்ளன. ஏனைய வீடுகளை விரைவாக அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் கிராமத்திற்கொரு வீடு எனும் விசேட வீடமைப்பு கருத்திட்டத்தினை கிளிநொச்சி மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்துவதை நாம் விரும்பி வரவேற்கின்றோம். அதேவேளை இந்திய அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்டதற்கமைவாக இந்திய வீட்டுத்திட்டம் நடைமுறைக்கு வரும் சந்தர்ப்பத்தில் மக்கள் எதிர்கொள்ளும் வீட்டுப்பிரச்சினையின் பெரும் பகுதிக்கு தீர்வு காண முடியும் என நாம் கருதுகின்றோம். மேலும் மின்சாரம், போக்குவரத்து, வீதி அபிவிருத்தி, மருத்துவ வசதிகள், கல்வித் துறை, விவசாயம் உள்ளிட்ட பல துறைகளும் முன்னேற்றம் கண்டுள்ளன.

இருப்பினும் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப அவை முழுமையாக நிவர்த்தி செய்யப்படாவிடினும் முழுமைப்படுத்தப்படுவதற்கான இலக்கை நோக்கி பணிகளை துரிதப்படுத்தி வருகின்றோம்.

ஜனாதிபதி மஹிந்த சிந்தனை திட்டத்திற்கமைவாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கிராமத்திற்கொரு வீடு எனும் விசேட வீடமைப்பு கருத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 14 ஆயிரத்து 660 வீடுகளை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-2)

# பிரித்தானிய பல்கலையில் இலங்கை மாணவனின் சடலம்

பிரித்தானியாவின் நியூபோட்ஸ் பல்கலைக்கழகத்தில் பயிலும் இலங்கை மாணவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எனினும் அவரின் பெயர் இன்னும் வெளியாகவில்லை. இந்தநிலையில் குறித்த மாணவர் திறமைவாய்ந்த மாணவராக விளங்கினார் என்று பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இலங்கை மாணவரின் மரணம் குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-2)

# விக்கிலீக்ஸ் நிறுவுநரை நாடு கடத்த உத்தரவு

விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜுலியன் அசேஞ் அவரது நிறுவனத்தில் பணிபுரியும் இரண்டு பெண்களை பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் துன்புறுத்தல் செய்ததாக எழுந்த குற்றச்சாட்டை விசாரித்த பின் அவரை பிரிட்டனிலிருந்து சுவீடனுக்கு நாடு கடத்த லண்டன் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பை எதிர்த்து ஜுலியன் அசேஞ் உச்ச நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவித்திருந்தது. அதனை தொடர்ந்து இந்த உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அவர் மேல் முறையீடு செய்தார். தான் சுவீடனுக்கு சென்றால் தனக்கு நீதி கிடைக்காது எனவும் தனது மீதான குற்றச்சாட்டுக்கு எதிராக போராட தன்னை இங்கிலாந்திலேயே இருக்க அனுமதி அளிக்க வேண்டும் எனவும் தனது மேல் முறையீட்டு மனுவில் கூறியிருந்தார்

மேலும் தன் மீதுள்ள குற்றச்சாட்டு பொய் என நிரூபிக்க சட்டப் போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்திருந்தார். இந்த மேல் முறையீட்டு மனு நேற்று லண்டன் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இந்த மனுவை விசாரித்த 7 நீதிபதிகள் கொண்ட குழுவில் அவரை நாடு கடத்த வேண்டும் என 5 நீதிபதிகளுக்கும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து 2 நீதிபதிகளும் கருத்து தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து அவர் சுவீடனுக்கு நாடு கடத்தப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த ஜுலியன் அசேஞ் சட்டப்போராட்டம் கடுமையாக தொடரும் என தெரிவித்துள்ளார். (அ-7)

# பெரும்பான்மையான மக்கள் அரசு மீது அதிருப்தி

## மங்கள சமரவீர எம்.பி தெரிவிப்பு

பெரும்பான்மையான மக்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் இந்த அபிவிருத்தியாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்னமும் பூரணமான ஆதரவினை வழக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தியுடன் காணப்படுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் உரிய முறையில் நிறைவேற்றத் தவறியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பெரும் எண்ணிக்கையான மக்கள் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்க மாட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை அதிகளவான மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது இன்னமும் முழுமையான நம்பிக்கை கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியில் சில உட்கட்சி முரண்பாடுகள் காணப்படுவதாகவும் அவற்றை ஒரு தேர்தல் வெற்றியின் மூலம் இல்லாதொழிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் பாவனைக்கு உட்படுத்தி தரப்படும்.

No. 06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

TP:- 021 2228680,
077 5925088, 075 0407430

(8508)





போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

நடைபெறுகின்றன

- அஞ்சல் சேவை உத்தியோகத்தர்(சனி,ஞாயிறு 1.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை)
- வங்கிசார் பரீட்சைகள் (ஞாயிறு 1.00 மணி)
- முகாமைத்துவ உதவியாளர் (ஞாயிறு 1.00 மணி)
- SLAS Ltd (சனி 9.00 மணி)
- SLPS Ltd (சனி 1.00 மணி)
- SLAS SLPS Open (சனி 1.00 மணி)
- Accountant (சனி, ஞாயிறு 1.00 மணி)
- Aduit maths (சனி 10.00 மணி)

யாழ்ப்பாணக்கல்லூரிப் பட்டப்படிப்புகள் பிரிவு , யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல்வங்கி அருகில் (T.P:-0754164564)

(8546)


சிங்கப்பூர் நாட்டின் வெளிவிவகாரத்துறை மற்றும் சட்டவாக்கல்துறை அமைச்சர் கே. சண்முகம் நேற்று யாழ். மாநகர சபைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது அங்கு நடைபெற்ற கூட்டத்தில் வெளிவிவாகரத்துறை அமைச்சர் சண்முகம் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நினைவுச் சின்னத்தை அமைச்சருக்கு வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச்செய்தியாளர்)

## கொடிகள் பாடசாலை அதிபர்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழாவினை முன்னிட்டு வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஒருவார காலத்திற்கு கொடி வாரம் இடம்பெறவுள்ளது.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கு தேவையான கொடிகளும் நிதியைச் சேகரிப்பதற் குகந்த உண்டியல்களும் ஜெய்ப்பூர் நிறுவன பணியாளர்களினால் யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கு நேரடியாக கையளிக்கும் பணி ஆரம்பமாகி கொடிவாரம் நிறைவு பெற்றதும் உண்டியல் யாவும் உரியவர்களினால் மீளப்பெற்றுக்கொள்ளப்படும் எனவும் நிறுவனத் தலைவர் வைத்தியர் திருமதி கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-7)




## தேசிய மட்டத்திற்கு தெரிவாகினர்

(கரவெட்டி)

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி இரு மாணவிகள் தகுதி பெற்றுள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற தமிழ்த்தினப்போட்டிகளில் பிரிவு 2 இல் பாவோதல் போட்டியில் ரவிக்குமார் ஆர்த்திகா முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

அதேபோன்று பிரிவு 5 இல் கவிதை ஆக்கப்போட்டியில் புஸ்பலிங்கம் ஆரத்தியா முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

இரு மாணவிகளும் எதிர்வரும் ஜுலை மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், உரும்பிராய் மேற்கு, மருதனார்மடப்பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## தேசிய இ.சே.மன்றத்தின் நிர்வாகிகள் தெரிவு

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட சம்மேளனத்தின் இவ்வாண்டு நிர்வாகத் தெரிவு கடந்த 22ஆம் திகதி காலை தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு மாவட்ட அலுவலகத்தில் உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட சம்மேளன தலைவர் ச. செந்தில்குமரன், உப தலைவர்களாக கே.கிருபானந்தன், ஆ.சுதன், செயலாளராக மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி ஸ்ரீமேனன், பொருளாளர் சி.நிரோசன், அமைப்பாளர் க.ரஜீவ பிரகாஷ் அத்துடன் விளையாட்டுத்துறை செயலாளர் எ.ஞானதீபன், தொழில்முயற்சி சி.கிருபாகரன், வெளிநாட்டுத் தொடர்பாளராக பே.சுபாகர், ஊடகத்துறை எஸ்.ரி.விமலதாஸ், நிதி- ச.மதியழகன், கலாசாரம்- க.மேகலா, கல்வி வழிகாட்டல் இ.கருணாநிதி, தேசிய சேவை- சு.கௌரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-37)

## வீட்டுத்தோட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தின் கீழ் விவசாயத் திணைக்களத்தால் நடத்தப்படும் வீட்டுத் தோட்டப் போட்டியானது கிராம மட்ட வீட்டுத் தோட்டம், மாணவர் வீட்டுத்தோட்டம், பாடசாலை தோட்டம், அலுவலர் நகர வீட்டுத் தோட்டம், அலுவலக வளாக தோட்டம் என்னும் பிரிவுகளில் நடைபெறவுள்ளதென யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவ்வீட்டுத்தோட்டப்போட்டியில் பங்குபற்றுவதற்கான விண்ணப்ப முடிவுத் திகதியானது எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை என அவர் அறிவித்துள்ளார். (அ-7)

# சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்

(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூர் நாட்டின் வெளி விவகாரம் மற்றும் சட்டவாக்கல்துறை அமைச்சர் கே. சண்முகம் நேற்று யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு விஜயத்தை மேற்கொண்டு சிங்கப்பூர் நாட்டின் நிதியுதவியுடன் நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பகுதியை பார்வையிட்டார்.

இவருடன் அந்நாட்டு உயர்அதிகாரிகளும் இந்தவிஜயத்தின் போது பங்கேற்றிருந்தனர். நூலகத்திலுள்ள சிறுவர் பகுதியை பார்வையிட்ட அமைச்சர் சண்முகம் கல்வியை விருத்தி செய்ய தொடர்ந்து எமது நாடு நிதியுதவியை வழங்கும் என்வும் அதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாகவும் வாக்குறுதி அளித்தார்.

அத்தோடு கடந்த 30 ஆண்டு காலம் பாரிய யுத்த அழிவுகளை இந்த பிரதேசம் சந்தித்து வந்ததை அனைவரும் அறிவோம். இருப்பினும் பல முன்னேற்றங்களை அடைந்து வருவதையும் அறியக்கூடியதாக வுள்ளது.

யுத்த அழிவுகளை மட்டும் சந்தித்து வந்த இந்தப் பிரதேசம் ஓரளவுக்கு சீரான நிலைமைகளை தற்போது அடைந்துள்ளது.

யாழ். மாவட்டத்திற்கு முதன் முறையாக நான் விஜயத்தை மேற்கொண்டுள்ளதால் முழுமையாக இந்தப் பிரதேசத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் இந்தப் பகுதி சிறார்களின் கல்வி விருத்திக்கு எமது நாடு தொடர்ந்து உதவிகளை செய்யும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இவரது இந்த விஜயத்தின் போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்டோரும் உடனிருந்தனர். (அ-6)

## மணவாளக் கோலவிழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வருணன் அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமாள் ஆலய மணவாளக்கோலத் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 108 சங்காபிசேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விசேட பூசைகள், ஆராதனைகள் இடம்பெற்று சுவாமியின் வீதியுலா இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலகர் அறிவித்துள்ளார். (அ-7)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் செருத்தனைப்பதி அருள்மிகு ஸ்ரீமகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (அ-9)

## முன்பள்ளிகளுக்கான வலுவூட்டல் திட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தினர் நூலக வலுவூட்டல் திட்டத்தின் கீழ் இம்மாதம் தமது எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கான பல வலுவூட்டல் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வலுவூட்டல் திட்டத்தின் கீழ் முன்பள்ளிகளை நாடிச் சென்று மாணவர்களுக்கு சத்துணவு, இலைக்கஞ்சி வழங்கல், நடமாடும் நூலக சேவை நடத்துதல், கதை கூறல், சித்திரம் வரைதல் தொடர்பான பயிற்சி வழங்குதல், தமிழ் உச்சரிப்பு தொடர்பான இறுவெட்டுக்களை காட்சிப் படுத்தல் மற்றும் புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி அது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துதல் ஆகிய நிகழ்வுகளை நடத்தவுள்ளது. இந்நிகழ்வுகளுக்கு நூலக அபிவிருத்தி ஆலோசனை சபையின் பொருளாளர் தி. தங்கவேல் அனுசரணை வழங்கவுள்ளார். (அ-3-29)

## ஓவியங்களின் கண்காட்சி விளக்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கலை வட்டம் மற்றும் நுண்கலைத்துறையின் ஆதரவில் இலங்கையைப் பிரதிநித்துவப்படுத்தும் ஓவியர்களுள் ஒருவரான முகனட் காடரால் யாழ்ப்பாணத்தில் 29 நாட்கள் என்னும் அவரது ஓவியங்களின் காட்சி விளக்கக் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய கலைப்பீட கட்டடத்தொகுதியில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் ஓவியர்கள், பாடசாலையில் சித்திரம் கற்கும் மாணவர்கள், கலை ஆர்வலர்கள், அனைவரையும் கலந்து கொண்டு ஓவியக்கலை பற்றிய தெளிவான விடயங்களை பெற்றுக்கொள்ள முடியுமென கலைவட்ட நுண்கலைத்துறைத் தலைவர் அறிவித்துள்ளார். (அ-9)

# இலங்கையில் சட்டம், நீதி என்பன மந்தமடைந்துள்ளன

(கொழும்பு)

தம்புள்ளை முஸ்லிம் பள்ளி மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து அந்த பள்ளி பொறுப்பாளர்களால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் அது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு இன்னும் குற்றவாளிகள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படாமை இட்டு நான் ஆச்சரியப்படுவதாக ஐ.தே.கட்சியின் பிரதி பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்டம், நீதி என்பன மந்தமடைந்துள்ளமை இதற்கு ஓர் உதாரணமாகும். இதுவரை இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணைகள் நடத்தப்படாமையினால் குருநாகல், எகலியகொடை, தெஹிவளை ஆகிய பகுதிகளிலுள்ள முஸ்லிம் பள்ளிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சமும் தற்போது முஸ்லிம் சமுதாயத்தில் உருவாகியுள்ளது.

மேலும் எதிர்காலத்தில் இப்படியான ஆலயங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்களுக்கும் இவ்வாறான சம்பவங்கள் உதாரணங்களாகி விடலாம். இலங்கை அரசியல் அமைப்பில் எமது நாட்டு பிரஜைகளுக்கு தத்தமது மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசமைப்பின்படி கிடைக்கப் பெற்றுள்ள இந்த உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் மற்றும் பொலிஸார் உரிய நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுப்பதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாகாண மட்ட சித்திரப்போட்டி

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான மாகாண மட்ட சித்திரப்போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிக்கு சமுகமளிக்கும் போட்டியாளர்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை வலய மட்டத்தில் முதலிடம் பெற்றவர்கள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

மாணவர்களின் ஆள் அடையாளத்தை அதிபர் கையொப்பமிட்ட புஃகைப்படத்துடன் மேலதிகமாக ஒரு அரைப்புகைப்படம் பாடசாலை சீருடையுடன் கொண்டு வருதல் வேண்டும்.

அத்துடன் வலய மட்டத்தில் மாணவர்கள் வரைந்த சித்திரங்களை தவறாது எடுத்துவர வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# கூட்டமைப்பின் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

## பிரபாகணேசன் எம்.பி., சிறிடெலோ உதயராசா கூட்டறிக்கை

வன்னி மாவட்டத்திற்குட்பட்ட நிர்வாக மாவட்டங்களான வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்கள் யுத்தத்திற்கு பின்பு பாரிய அபிவிருத்தியை எதிர்பார்த்து காத்து நிற்கின்றனர். மறுபுறம் இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வினையும் அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இனப்பிரச்சினைக்கான தீர்வினை நோக்கி தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் செயற்பட்டு வருவதனால் இம்மக்கள் எதிர்பார்க்கும் அபிவிருத்தியை பெற்றுக் கொடுக்க அவர்களால் முடியாதிருக்கின்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரின் இனப்பிரச்சினை தீர்விற்கான முயற்சிக்கு எமது இரு கட்சிகளின் கூட்டமைப்பும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என ஜனநாயக மக்கள் காங்கிரசும் சிறிரெலோ கட்சியும் தெரிவித்துள்ளது.

இக் கட்சிகள் இரண்டும் இணைந்து செயற்படுவதற்கான பேச்சுக்கள் அண்மையில் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பம்பலப்பிட்டி காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் இவ்விரு கட்சிகளின் தலைவர்களும் கூட்டாக கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அதேநேரம் வன்னி மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் கல்வி பிரச்சினை, சுகாதரமின்மை, வேலைவாய்ப்பு, காணி உறுதிப்பத்திரமின்மை, அடிப்படை வசதிகள், நிரந்தர ஆசிரியர் நியமனம் போன்ற பல பிரச்சினைகளும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையும் அரசாங்கத்தின் மூலம் தீர்த்து வைப்பதற்காக பாராளுமன்ற பிரதிநிதி ஒருவர் அவசியப்படுகின்றார் என்ற அடிப்படை நோக்கிலும் இக்கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு நாம் ஆதரவளித்து வந்தாலும் அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டி எமது மக்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயத்தை பெற்றுக் கொடுப்பதில் நாம் உறுதியாக இருப்போம். இக்கூட்டமைப்பில் சேர்வதற்காக ஏனைய சிறு கட்சிகளுடனும் ஸ்தாபனங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது. இக்கூட்டமைப்பு தனிப்பட்டவர்களின் நலனுக்காகவோ மாகாண பாராளுமன்ற உறுப்புரிமைகளை பெறுவதற்காகவோ இன்றி முழுமையான முறையில் எமது தமிழ் மக்களின் அவலங்களை போக்கி ஐக்கிய இலங்கைக்குள் எமது மக்கள் தலை நிமிர்ந்து வாழ வழிவகுக்கும். (அ)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1215-மொங்கோலியப் பேரரசன் செங்கிஸ்கான் பீஜிங் நகரைக் கைப்பற்றினான்.

★ 1485-ஹங்கேரியின் மத்தாயஸ் வியென்னாவைக் கைப்பற்றினான்.

★ 1533-ஆன் பொலெய்ன் இங்கிலாந்தின் அரசியாக முடி சூடினாள்.

★ 1605-மொஸ்கோவில் ரஷ்யப் படைகள் மன்னன் இரண்டாம் பியோதரையும் அவனது தாயாரையும் சிறைப் பிடித்தனர். இவர்கள் பின்னர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1792-கென்டக்கி ஐக்கிய அமெரிக்காவின் 15 ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.

★ 1796-டென்னசி ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.

★ 1812-அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் மாடிசன் ஐக்கிய இராச்சியம் மீது போரை அறிவிக்கும்படி காங்கிரசைக் கேட்டுக் கொண்டார்.

★ 1831-ஜேம்ஸ் ரொஸ் வடமுனையைக் கண்டுபிடித்தார்.

★ 1855-அமெரிக்க நாடுகாண் பயணி வில்லியம் வோக்கர் நிக்கராகுவாவைக் கைப்பற்றினார்.

★ 1869-மின்சாரத்தால் இயங்கும் வாக்களிக்கும் இயந்திரத்துக்கான காப்புரிமத்தை தோமஸ் எடிசன் பெற்றார்.

★ 1879-பிரெஞ்சு இளவரசன் நெப்போலியன் யூஜின் ஆங்கிலோ- சூளு போரில் தென்னாபிரிக்காவில் கொல்லப்பட்டான்.

★ 1910-ரொபேர்ட் ஸ்கொட் தலைமையிலான ஆய்வுக்குழு தென் முனையை நோக்கிய பயணத்தை இங்கிலாந்தில் இருந்து ஆரம்பித்தது.

★ 1941-ஈராக் பக்தாத்தில் யூதர்களுக்கெதிராக இடம்பெற்ற கலவரங்களில் 180 யூதர்கள் உயிரிழந்தனர்.

★ 1946-ருமேனியாவின் பிரதமர் இயன் அண்டனேஸ்கு மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்தார்.

★ 1947-சுதந்திரன் இதழ் கொழும்பில் இருந்து வெளியாக ஆரம்பித்தது.

★ 1959-நிக்கராகுவாவில் புரட்சி ஆரம்பமானது.

★ 1962-நாசி வதைமுகாம்களை உருவாக்கிய அடொல்ஃப் ஐக்குமன் இஸ்ரேலில் தூக்கிலிடப்பட்டார்.

★ 1964-சிறேதொகோ தேசிய வனம் ஜப்பானில் அமைக்கப்பட்டது.

★ 1971-தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1978-டோக்கியோ பங்குச் சந்தையின் நடவ்டிக்கைகள் ஆரம்பமாகின.

★ 1979-90 ஆண்டுகளுக்குப் பின்னர் ரொடீசியாவில் முதற்தடவையாக கறுப்பினத்தவர்களின் அரசு பதவியேற்றது.

★ 1980-சி.என்.என். ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்தது.

★ 1981-யாழ் பொதுநூலகம் மே 31 நள்ளிரவு நேரம் எரிக்கப்பட்டது.

★ 2001-நேபாள மன்னர் பிரேந்திராவும் அவரது குடும்பமும் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1926-ஆண்டி கேரிபித், அமெரிக்க நடிகர்

★ 1937-மோர்கன் ஃபிறீமன், அமெரிக்க நடிகர்

★ 1940-ரேனே ஆபெர்ஜோநோசிஸ், அமெரிக்க நடிகர்

★ 1947-ரோன் வூட், அமெரிக்க இசைக் கலைஞர்

★ 1953-ரோனி டுன், அமெரிக்க இசைக் கலைஞர்

★ 1959-ஆலன் வல்டேர், பிரித்தானிய இசைக் கலைஞர்

★ 1960-சைமன் கல்லுப், பிரித்தானிய இசைக் கலைஞர்

★ 1969-தெரசா போலோ, அமெரிக்க நடிகை

★ 1974-அலனிஸ் மாரிஸ்சாட், கனேடிய இசைக் கலைஞர்

★ 1974-மெலிசா சகோமில்லேர், அமெரிக்க நடிகை

★ 1970-மாதவன், தமிழ் நடிகர்

### இறப்புக்கள்

★ 1968-ஹெலன் கெல்லர், அமெரிக்கப் பெண் எழுத்தாளர் (பி.1880)

★ 1979-வேர்னர் ஃபோர்ஸ்மன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1904)

★ 1999-கிறிஸ்தோபர் கொக்கரல், காற்றுமெத்தை உந்தைக் கண்டுபிடித்தவர் (பி.1910)

★ 1996-நீலம் சஞ்சீவ ரெட்டி, இந்தியாவின் ஆறாவது ஜனாதிபதி(பி.1913)

★ 2001-பிரேந்திரா, நேபாள மன்னர் (பி.1945)

### சிறப்பு நாள்

★ சர்வதேச குழந்தைகள் தினம்

★ சமோவா- சுதந்திரதினம் (1962)

★ துனீசியா- அரசியல் நிர்ணய நாள், வெற்றி நாள் (1959)



★ 1926- அமெரிக்க நடிகை மார்லின் மன்றோ பிறந்ததினம் (இ.1962)

# பிரிட்டன் எம்.பிக்கள் யாழிற்கு வருவர்

லியாம்பொக்ஸ் உள்ளிட்ட பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றை விரைவில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவின் கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்களே இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு தற்போதைய நிலைமை குறிப்பாக வடக்கில் இராணுவ பிரசன்னம் தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாக கண்காணிக்க உள்ளதாக ஜனாதிபதி ஆலோசகர் அருண் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பினை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் பிரித்தானியாவிற்கு விஜயம் செய்திருந்தபோது பாராளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்கவும் தாமும் இந்த அழைப்பை விடுத்ததாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# கண்காணிப்பு நிலையங்களில் நூறு பீரங்கிகளை காணவில்லை

(காலி)

காலி கோட்டையின் கண்காணிப்பு நிலைகளில் பொருத்தப்பட்டிருந்த 100 பீரங்கிகள் காணாமற் போயுள்ளதாகத் தவல்கள் வெளியாகியுள்ளன.

ஒல்லாந்தரின் ஆட்சியில் இலங்கை இருந்தபோது பயன்படுத்தப்பட்ட பீரங்களே காணாமற் போயுள்ளதாக காலி மரபுரிமைகள் நிறுவகம் தெரிவித்துள்ளது.

காலி கோட்டையில் இந்த பீரங்கிகளை கண்காணிப்பு நிலைகளில் பொருத்தி வைத்து ஒல்லாந்தர் பயன்படுத்தி வந்ததாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கையின் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் ஜெகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இந்தப் பீரங்கிகளை உலோகத்துக்காக களவாடி செல்லப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-2)

# உலகளாவிய ரீதியில் சைபர் அபாய எச்சரிக்கை

ஐக்கிய நாடுகளின் சர்வதேச தொலைத் தொடர்புகள் சங்கம் உலகளாவிய ரீதியில் சைபர் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

வரலாற்றில் விடுக்கப்பட்ட மிகவும் பாரதூரமான அபாய எச்சரிக்கை இதுவாகும் என ஜெனிவாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுகின்ற ஐ.நாவின் சர்வதேச தொலைத் தொடர்புகள் சங்கத்தின் சைபர் பாதுகாப்பு இணைப்பதிகாரி மாக்கோ ஒபிசோ கூறியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் வியாபித்து வருவதாக அண்மையில் இனங்காணப்பட்ட ஃப்ளேம் எனும் கணனி வைரசிலிருந்து பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா.வின் சர்வதேச தொலைத்தொடர்புகள் சங்கம் தமது உறுப்பு நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. பல வருடங்களாக சைபர் தளத்தில் காணப்பட்ட வைரஸ் இனங்காணப்பட்டுள்ளதாக ரஷ்யாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் பிரபல இணையத்தள பாதுகாப்பு நிறுவனம் அண்மையில் அறிவித்தது.

ஃப்ளேம் வைரஸ் தொடர்பாக இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து இலங்கை கணனி அவசர பிரதிபலிப்பு ஒன்றியத்தின் பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த கருத்துத் தெரிவிக்கையில், இந்த வைரஸைப் பயன்படுத்தி பிரபல நிறுவனங்களின் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளது.

இந்நிலையில் தனி நபர்களின் கணனிகளுக்கு இந்த வைரஸினால் தாக்கம் மிகவும் குறைவாகவே உள்ளதாகவும் இந்த வைரஸ் தாக்கத்திற்குள்ளான கணனிகளைப் பாதுகாப்பதற்கான மென்பொருளொன்றை ஏற்கனவே ஈரான் அறிமுகப்படுத்தியுள்ளதாக இலங்கை கணனி அவசர பிரதிபலிப்பு ஒன்றியத்தின் பாதுகாப்பு பொறியியலாளர் கூறினார்.

குறித்த மென்பொருளை பயன்படுத்துவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை பெற முடியுமா என்பது குறித்து தற்போது ஆராய்ந்து வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-7)

# 'கிராமத்திற்கு ஒரு வீடு' திட்டம் வவுனியாவில் ஆரம்பித்து வைப்பு

(பூந்தோட்டம்)

நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சும் தேசிய வீடமைப்பு அதிகார சபையும் இணைந்து மேற்கொள்ளும் ஜனசெவன திட்டத்தின் மூலம் கிராமசேவகர் பிரிவில் ஒரு வீடமைக்கும் திட்டம் நேற்றுமுன்தினம் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வீடமைப்பு மற்றும் தேசிய வீடமைப்பு குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கையினூடாக 14 ஆயிரத்து 660 வீடுகளை தேசிய ரீதியில் அமைக்கவுள்ளதுடன் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 102 கிராம சேவகர் பிரிவிலும் தலா ஒரு வீடுகள் கட்டப்படவுள்ளன. இதற்காக தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் பயனாளிகளுக்கு 11 வீத வட்டியுடன் இரண்டு இலட்சம் ரூபா கடனாக வழங்கப்படவுள்ளதுடன் ஆரம்ப நிகழ்வான நேற்று 23 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக 40 ஆயிரம் ரூபா காசோலையும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு வவுனியா பிரதேச செயலாளர் ஏ.சிவபாதசுந்தரன் பிரதம அதிதியாகவும் ஜனாதிபதி இணைப்பாளர் சிவநாதன் கிஷோர், முன்னாள் பிரதி அமைச்சர் சுமதிபாலா, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா முகாமையாளர் வி.கணேசநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-266)

## அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்காத

# வெளிநாட்டு தூதரக வைபவங்களில் கலந்து கொள்ள வேண்டாம்- ஜனாதிபதி

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்காத வெளிநாட்டு தூதரகங்களில் நடக்கும் வைபவங்களில் கலந்துகொள்ள வேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் நடந்த சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், எந்த தூரகங்களின் வைபவங்களில் கலந்துகொள்ள வேண்டாம் என்பதை ஜனாதிபதி பெயர் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை. எவ்வாறயினும் ஜனாதிபதி அரசாங்கத்திற்கு எதிரான தூதரங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தியுள்ள போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், தூரகங்களுடன் தொடர்புகளை வைத்துள்ளதுடன் தகவல்களையும் பரிமாறி வருவதாக அவ் இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசாங்கத்திற்கு தாவிய ஜோன்ஸ்ட்ன போன்ற முக்கிய அமைச்சர்கள் கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் அங்கம் வகிப்பதில்லை. ஆனால், பிரதியமைச்சர் கருணா அதில் அங்கம் வகிக்கின்றார்.

அதேவேளை, மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்காவுக்கு சென்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு கண்டு வந்துள்ளதாக கூறியுள்ளார். (அ-2)

# வற்றாப்பளை கண்ணகிக்கு விசேட பேருந்து சேவை

(கொழும்பு)

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசி பொங்கல் விழாவை முன்னிட்டு விசேட பஸ் சேவையை நடத்த இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ள வைகாசி பொங்கல் விழாவை முன்னிட்டு நாளை முதல் நான்காம் திகதி வரை விசேட பஸ் சேவைகளை ஏற்பாடு செய்துள்ளதாக வடமாகாண பிரதம பிராந்திய முகாமையாளர் எஸ்.அஸ்ஹர் தெரிவித்தார்.

பொங்கல் விழாவில் கலந்துகொள்ளும் பக்தர்கள் மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு ஏதுவாக எதிர்வரும் ஐந்தாம், ஆறாம் திகதிகளில் பஸ் சேவைகள் இடம்பெறும் என அவர் குறிப்பிட்டார். முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க வழிபாட்டுத்தலமான வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசி பொங்கல் விழா எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ளது. (அ-7)



யுத்தம் நிறைவடைந்து மூன்று வருடங்கள் நிறைவடைந்தும் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்படாமல் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்கின்றனர். திருகோணமலை, சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கிளிவெட்டி அகதி முகாம்களில் இன்றும் தங்கியிருப்பதை படத்தில் காணலாம்.

# சரத் சிவில் உரிமைகளை மீளப்பெறுவதற்கு முயற்சி

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட முடிவு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளார்.


மறுக்கப்பட்டுள்ள சிவில் உரிமைகளை மீள உறுதி செய்து கொள்ளும் நோக்கில் இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளார். 2010 ஆம் ஆண்டு சரத் பொன்சேகாவிற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் அவரது சிவில் உரிமைகள் இரத்து செய்யப்பட்டன.

அண்மையில் பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட போதிலும் சிவில் உரிமைகள் மீள வழங்கப்படவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க சரத் பொன்சேகா திட்டமிட்டுள்ளார். ஆயினும் சிவில் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள நிலையில் சரத் பொன்சேகாவினால் தேர்தல்களில் போட்டியிட முடியாது.

இதேவேளை, சரத் பொன்சேகாவின் சிவில் உரிமைகளை மீளப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றில் விசேட பிரேரணை ஒன்றை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 144



நேசப்படைகளின் கவசவண்டிகளின் நகர்வு

### 1944 ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள்

...இவ்வாறாக நேசநாட்டினர் கணிசமான அளவு விஞ்சிய நிலையிலிருந்தும்கூட ஜனவரி, பெப்ரவரி, மார்ச்சில் ரோமைக் கைப்பற்ற இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. ஜூன் 4 ஆம் திகதிதான் பிரிட்டிஷ்- அமெரிக்க துருப்புகள், அந்நேரத்தில் இத்தாலிய தேசபக்தர்களால் விடுவிக்கப்பட்ட இத்தாலியத் தலைநகரினுள் நுழைந்தன.

ஆகஸ்ட் நடுவில் கோத்தா தற்காப்புக் கோட்டையை நேச நாட்டுத் துருப்புகள் அடைந்தபோது அவை பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் உறுதியான எதிர்ப்பைச் சந்தித்தன. 1944 ஆம் ஆண்டு இறுதியில்தான் பிரிட்டிஷ்- அமெரிக்கத் துருப்புகளால் எதிரியின் இந்தத் தற்காப்பு எல்லையை மீறி 40-100 கி.மீ. தூரம் முன்னேறி, ராவேன்னா, பியேத்ரஸான்டா கோட்டையை அடைய முடிந்தது. குளிர்காலம் பூராவும் இந்த எல்லையில் நேச நாட்டவரின் தாக்குதல் நிறுத்தப்பட்டது.

1944 வசந்த காலத்தில் எதிர்ப்பு இயக்கம் இத்தாலியில் விரிந்து பரந்தது. கொரில்லாப்படை வீரர்கள் பாசிச ஜேர்மனியத் துருப்புகளுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தி, நேசநாட்டுத் துருப்புகளின் தாக்குதலுக்கு உதவினர். இவர்கள் பாலங்களைத் தகர்த்தனர். சாலைகளில் வலை விரித்தனர், போக்குவரத்து வாகனங்களைத் தாக்கினர், போர்த் தளவாடங்கள், துருப்புகளை ஏற்றிச் சென்ற இராணுவப் புகைவண்டிகளைக் கவிழ்த்தனர், எதிரியின் மத்தியில் பீதியை ஏற்படுத்தினர்.

1944 ஜூன் முதல் 1945 மார்ச் வரை கெரில்லாப்படை வீரர்கள் 6449 ஆயுத நடவடிக்கைகளை மேற் கொண்டனர், 5570 சீர்குலைவு நடவடிக்கைகளை நடத்தினர், 16,000 க்கும் குறையாத பாசிஸ்டுகளை அழித்தனர், பெருமளவு எதிரியின் ஆயுதங்களைக் கைப்பற்றினர்.




அர்டேன்னியின்மீதான எதிர்த்தாக்குதலுக்கான திட்டத்தை ஹிட்லரும் அவரின் இராணுவ அதிகாரிகளும் ஆராய்கின்றனர்

ஹிட்லரின் படைத் தலைமை பெரும் சக்திகளை ஈடுபடுத்தி கெரில்லாப்படை வீரர்களுக்கு எதிராக அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. உதாரணமாக 1944-1945 குளிர்காலம், இதற்காக அது 10 ஜேர்மனிய டிவிசன்கள் உட்பட 15 டிவிசன்களை ஈடுபடுத்தியது. 1944 இறுதி வாக்கில் ஆக்கிரமிப்பாளர்களுக்குஎதிரான போராட்டத்தில் கெரில்லப்படை வீரர்களுக்குக் கடுமையான இழப்புகள் ஏற்பட்டன. என்றாலும் அவற்றைப் பொருட்படுத்தாது கெரில்லாப்படை வீரர்கள் தொடர்ந்து இயங்கினர்.

நேசநாட்டுச் சக்திகளின் இராணுவ நடவடிக்கைகளில் 1 டாங்கி டிவிசன், 1 மோட்டார் டிவிசன் உட்பட 15 பாசிச ஜேர்மனிய டிவிசன்கள் முறியடிக்கப்பட்டன. 1944 ஜூன் - டிசம்பரில் வேர்மஹ்டின் துருப்புகளின் தரப்பில் மொத்தம் 19,000 நபர்கள் தொலைந்து போனார்கள். விமானத் தாக்குதல்கள்தான் ஜேர்மனியர்களின் கண்சமான இழப்புகளுக்குக் காரணம். நேச நாட்டவரின் தரப்பில் 32,000 நபர்கள் கொல்லப்பட்டனர். 1இலட் .சத்து 34 அயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். சுமார் 23,000 பேர்கள் தொலைந்து போனார்கள்.

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

1944 ஆம் ஆண்டின் இறுதியில் நேச நாட்டுத் துருப்புகள் மத்திய இத்தாலியைக் கைப்பற்றின. ரோம், பிளாரென்ஸ் பிரதேசங்களில் வான் படைத் தளங்களைக் கைப்பற்றி தம் விமானப்படையின் பெரும் சக்திகளை இங்கு கொண்டு வந்த பிரிட்டிஷ்- அமெரிக்கப்படைத் தலைமை தெற்கேயிருந்து ஜேர்மனியின் மீது பலத்த விமானத் தாக்குதல்களைத் தொடுப்பதற்கான பெரும் வாய்ப்புக்களைப் பெற்றது.

ஆனால், 1944 ஆம் ஆண்டு நேச நாட்டினர் இத்தாலியில் தமது நடவடிக்கையின் இலட்சியத்தை அடையவில்லை. இவர்கள் கோத்தா கோட்டைப் பிளந்தால் பேர ஆற்றுப் படுகையை அடைய முடியவில்லை. பின்வாங்கிய எதிரியை மெதுவாகவே துரத்திச்சென்றனர்; ஜேர்மனியத் துருப்புகள் பின்வாங்கும் வழியைத் துண்டிக்கும் வாய்ப்புகளை நேச நாட்டினர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதனால் ஹிட்லரின் படைத் தலைமை கிட்டத்தட்ட தங்குதடை ஏதுமின்றி தம் துருப்புகளை முன்கூட்டியே திட்டமிடப்பட்ட தற்காப்பு எல்லைகளுக்கு இட்டுச் சென்றது.

இத்தாலியில் நேசநாட்டினர் தமது நடவடிக்கைகளை பூர்த்தி செய்யாததற்கு அவர்களுடைய படைத் தலைமையின் உறுதியற்ற நிலைதான் பெரிதும் காரணமாகும். முன்னாள் பாசிச ஜெனரல் வெஸ்ட்ஃபால் இது பற்றி பின்வருமாறு எழுதினான் "...போர்த்தந்திரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மேற்கத்திய நேச நாட்டினர் அதிகத் துணிவை மட்டும் வெளிப்படுத்தியிருந்தால் அவர்களால் பெரிதும் முன்னராகவே, தமக்கும் மற்றவர்களுக்கும் கணிசமான அளவு குறைந்த இழப்புகளுடனேயே அப்பெனீன் தீபகற்பத்தில் நடவடிக்கையை வெற்றிகரமாக முடித்திருக்க முடியும்."

### 6.பாசிச சமுத்திரப் பிரதேசத்திலும் ஆசியாவிலும் நேச நாட்டவரின் தாக்குதல்

1943 ஆம் ஆண்டு கோடையிலும் இலையுதிர் காலத்திலும் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் பெரும் படைத்திரட்டுகள் முறியடிக்கப்பட்டதானது, பசுபிக்சமுத்திரப் பிரதேசத்தில் நேசநாட்டவரின் இராணுவ நடவடிக்கைகளுக்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது. 1944 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அலெவூட் தீவுகள், ஹவாய்த் தீவுகள், கில்பெர்ட் தீவுகள் மற்றும் ஏலிஸ் தீவுகளிலிருந்து நேச நாட்டினர் சல்மோன் தீவுகளிலும் நியூ கினியின் கிழக்குப்பகுதியிலும் இரா ணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந் தனர். பசுபிக்சமுத்திர போர்முனை யில் இவர்களிடம் 13 தரைப்படை டிவிசன்கள், 3 கடல் காலாட்படை டிவிசன்கள், தரைப் படை விமானப்படையின் 32 விமானப் பிரிவுகள் பெரும் கடற்படை ஆகியன இருந்தன. கடற்படையில் 12 போர்க் கப்பல்கள், 28 விமானந் தாங்கிக் கப்பல்கள், 32 குரூசர்கள், 123 நீர்மூழ்கிக் கப்பல்கள், 188 நாசகாரிக் கப்பல்கள், 57 பாதுகாப்பு கண்ணி வெடிக் கப்பல்கள், ஏராளமான இன்னும் பிற கப்பல்கள் ஆகியன இருந்தன. தரைப்படை மற்றும் கடற்படையின் விமான யூனிட்டுக் களில் 6676 விமானங்கள் இருந்தன. மொத்தம் பசுபிக் சமுத்திரப் பகுதியில் 16000 க்கும் கூடுதலான போர் வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் இருந்தனர். ஒரு சில நூறு ஆயிரம் நபர்களைக் கொண்ட இந்திய, ஆஸ்திரேலிய, நியூசிலாந்து துருப்புகளும் நேச நாட்டுப் படைத் தலைமையின் கீழிருந்தன.



ஜேர்மனியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிறப்புவாய்ந்த இயந்திரத் துப்பாக்கியை நேசப்படைகள் ஆராய்கின்றனர்

(தொடரும்)

# துன்பங்களை அனுபவிக்கின்றோம்; எங்களை மீள்குடியமர்த்துங்கள்

## தேசிய சமாதான பேரவையிடம் மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**இடம்பெயர்ந்து பல துன்பங்களை நாளாந்தம் அனுபவித்து கொண்டிருக்கும் எம்மை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுங்கள் என தேசிய சமாதான பேரவையிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

தேசிய சமாதான பேரவை ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் சக்திப்படுத்தப்பட்ட பல்வேறு மட்ட சிவில் சமூகங்கள், சமாதானம், ஜனநாயகம், மனித உரிமைகளுக்காக ஒன்றிணைந்து சமாதானத்திற்கான பங்களிப்பு செய்தல் என்னும் செயற்றிட்டத்தின் கீழ் சமாதான செயற்பாட்டுக்குழுவை மாவட்ட ரீதியில் அமைப்பதற்கான ஒன்றுகூடலை நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்திலுள்ள ஒரிப்லாம் நிறுவனத்தின் மண்டபத்தில் நடத்தியது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பொது மக்களினாலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

இதில் கலந்து கொண்ட மக்கள் தமது நிலைப்பாட்டை தெரிவிக்கையில்,

போருக்கு பின்னரான இந்த மூன்றாண்டு காலப்பகுதியில் பெருமளவான மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என அரசாங்கத் தரப்பினரால் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்ற போதிலும் இன்னும் எத்தனையோ ஆயிரம் பொதுமக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளனர்.

வலிகாமம் பகுதியில் 15 கிராம சேவையாளர் பிரிவில் இன்னும் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை. வன்னியிலும் இவ்வாறு பல பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

போரில் பாதிக்கப்பட்டவர்களின் மனங்கள் இன்னும் பாதிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது.

கலாசார சீர்கேடுகளும் குற்றச் செயல்களும் அதிகரித்து செல்கின்றன. இதனை தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்களினால் வலியுறுத்தப்பட்டது.

தேசிய சமாதான பேரவையின் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், நாட்டில் 8 மாவட்டங்களில் இந்த மாவட்ட சமாதான செயற்பாட்டுக்குழு ஆரம்பிக்கும் பணி தொடங்கியுள்ளதாகவும் இந்தக் குழுக்களை ஒன்றிணைத்து போருக்கு பின்னரான சமாதான குழு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அதனூடாக பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(அ-6)



கரம்பைக்குறிஞ்சி முன்பள்ளி சிறார்களுக்கு இராணுவத்தினரால் பால்மா வகைகள், பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 52 ஆவது படைப்பிரிவினர் முன்பள்ளி சிறார் ஒருவருக்கு அன்பளிப்பு வழங்குவதை படத்தில் காணலாம்.

# இனந்தெரியாதோர் தாக்குதல்; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்காகி வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் ஆனது நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் அவரின் வீட்டின் அருகே இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பாடசாலை வீதி, கட்டுடை, மானிப்பாயை சேர்ந்த கே.விக்னேஸ்வரன் (வயது 38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே காயங்களுக்கு உள்ளானவர் ஆவார்.

(அ-2)

# தகுதியற்றவர் மீண்டும் கிழக்கு முதலமைச்சராக வரமுடியாது

## துரைரெத்தினம் உரை

(கொழும்பு)

தகுதியற்றோர் மீண்டும் கிழக்கில் முதலமைச்சராக வரமுடியாது எனவும் இதனை வருகின்ற தேர்தலிலேயே தமிழ் மக்கள் நிரூபிப்பர் எனவும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த கால தமிழீழ போராட்ட வரலாற்றில் தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் எஞ்சி இருக்கின்ற ஒவ்வொரு தமிழரும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்பு செய்திருக்கின்றீர்கள்.

உங்களது குழந்தைகளை போர்க்களத்திற்கு அனுப்பியுள்ளீர்கள். பலர் பொருட்களை வாரி அள்ளி வழங்கியுள்ளீர்கள். பலர் கருத்துக்களாக பேசி இருக்கின்றீர்கள். பலர் உடமைகள்ள வழங்கி இருக்கின்றீர்கள். பலர் ஏதோ ஒரு வகையில் இந்தப் போராட்டத்துக்காக அர்ப்பணித்துள்ளீர்கள்.

இவற்றுக்கெல்லாம் மேலாக எழுதி, எழுதிக் கொண்டு இன்று வீட்டுக்குள் அடைபட்டிருக்கும் பத்திரிகையாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இது கட்சியின் மாநாடு. இது வருடா வருடம் நடத்தப்பட வேண்டும் என்ற வகையிலும் மிகவும் சிறப்பாக நடத்தப்படுகிறது.

இந்த மாநாடு நடத்துவதால் தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காக நீங்கள் அளித்த வாக்குகள் கடந்த தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு அளித்த வாக்குகள் சர்வதேச ரீதியாக அமெரிக்கா,இந்தியா என்ற கதவுகளை திறந்துள்ளது. இதன்மூலம் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தியுள்ளீர்கள் என்பதுதான் உண்மை.

கிழக்கில் 27 தமிழ், முஸ்லிம் பத்திரிகையாளர்கள் இருக்கின்றார்கள். சந்தோசமாக வீட்டில் உறங்க முடியாது என்று எனக்கு தெரியும். அவர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். அவர்களும் மிகவும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

தமிழ்த்தேசியத்தை பாதுகாக்க அயராது பாடுபடும் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை முன்னிட்டு கிழக்கில் உள்ள சில கட்சி விஷமிகள் கறுப்புக் கொடிகள் கட்டி எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இந்த விஷமிகளிடம் நான் ஒன்றை கேட்க விரும்புகின்றேன். அதாவது வன்னியில் நடந்த படுகொலையை சமப்படுத்துவதற்காகவும் நியாயப்படுத்துவதற்காகவும் வெளிநாடு சென்று நீங்கள் குரல் கொடுத்தீர்கள். அப்படியானால் அதற்கு நாங்கள் எந்தக் கொடியை காட்டுவது?(அ-2)

# எதிர்ப்புக்களையும் மீறி லண்டனில் உரையாற்ற செல்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

பிரித்தானிய மகாராணியின் வைர விழாவில் கலந்துகொள்ளச் செல்லும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 6 ஆம் திகதி பொதுநலவாய வர்த்தக மையத்தில் உரையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தகவல்களை உறுப்பு நாடுகளின் தலைமையகம் பெற்றுள்ளது. எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மாநாட்டிலேயே ஜனாதிபதி மஹிந்த உரையாற்றவுள்ளார்.

இதற்கு பிரித்தானியாவின் சில தமிழர் அமைப்புகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. இந்நிலையில் அன்றையதினம் குறித்த நிகழ்வு இடம்பெறும் வளாகத்தில் தமிழ் மக்கள் தமது எதிர்ப்புகளை வெளியிடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லண்டன் மக்களின் பாரிய ஆதரவில் இயங்கி வரும் பிரித்தானிய தமிழர் பேரவை இதன்போது பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

கொமன்வெல்த் வர்த்தக மாநாட்டில் மஹிந்த ராஜபக்ஷ பேசக்கூடாது எனவும் அவர் ஒரு போர்க்குற்றவாளி என்று தெரிவிக்கும் பல தொலைபேசி அழைப்புகள் ஏற்கனவே மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு கிடைத்த வண்ணம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ-2)

# மீண்டும் எரிபொருளின் விலை அதிகரிப்புக்கு அனுமதி கோருகிறது ஐ.ஓ.சி. நிறுவனம்

(கொழும்பு)

இலங்கையில் இயங்கும் இந்திய எரிபொருள் நிறுவனமான ஐ.ஓ.சி. தாம் விற்பனை செய்யும் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்க இலங்கை அதிகாரிகளிடம் அனுமதி கோரியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக தாம் இந்த விலையுயர்வு குறித்த கோரிக்கையை விடுத்து வருவதாக ஐ.ஓ.சி. தெரிவித்துள்ளது.

இறக்குமதி வரிகளின் அதிகரிப்பு காரணமாக பாரிய நட்டங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, அதனை ஈடுசெய்யும் முகமாகவே விலையுயர்வை கோருவதாக ஐ.ஓ.சி. தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் பெற்றோலின் விலையை 10 ரூபாவாலும் டீசலின் விலையை 13 ரூபாவாலும் அதிகரிக்க ஐ.ஓ.சி. கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் ஐ.ஓ.சி. தற்போது நாடு முழுவதும் 157 எரிபொருள் நிரப்பு நிலையங்களை கொண்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் கடந்த மாதத்திலேயே எரிபொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரிக்கப்பட்டன. இதன் காரணமாக ஏனைய பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# ஆண்களுக்கான 'கரம்' சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் கரம் அணியும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கரம் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பழைய மாணவி திருமதி முரளிதரன் பானுரேகாவின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது என யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் தலைவர் அறிவித்துள்ளார்.

(அ-7)

# யாழ்ப்பாண மக்கள் இராணுவத்தினருடன் ஒத்துழைத்து வாழ்கின்றனர்-கோத்தபாய

(கொழும்பு)

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என கோரிக்கை விடுப்பது அங்கு வசிக்கும் மக்கள் அல்ல வட பகுதி மக்களின் அரசியல் அதிகாரத்தை விழுங்கியுள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பே அவ்வாறான கோரிக்கை விடுப்பதாக கோத்தபாய தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டங்களை விட அனுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களில் அதிகளவான இராணுவ முகாம்கள் உள்ளன. எனினும் அங்குள்ள முகாம்களை அகற்றுமாறு மக்கள் கூச்சல் போடுவதில்லை என் பதை சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு தான் சுட்டிக்காட்ட விரும்புவதாகவும் கோத்தபாய கூறியுள்ளார்.

தியத்தலாவ போன்ற பிரதேசங்களில் இராணுவ முகாம் மற்றும் இராணுவத்தினர் இருப்பதாலேயே அந்த பிரதேசம் பொருளாதார ரீதியில் வலுவடைந்து காணப்படுகின்றது.

இராணுவ முகாம்கள் இருப்பதானல் அந்த பிரதேசங்களின் பொருளாதாரம் வலுவடையும். யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் இராணுவத்தினருடன் இராணுவ முகாம்களுடன் ஒத்துழைத்து வாழ்ந்து வருகின்றனர்.

இராணுவத்தினருக்கு தேவையான காய்கறிகள் மற்றும் உணவு பொருட்கள் யாழ்ப்பாண மக்களிடம் இருந்தே கொள்வனவு செய்யப்படுகின்றன. மீன்கள் வடக்கு மக்களிடம் இருந்தே பெறப்படுகின்றன.

இதனால் இந்த முன்னேற்றத்திற்கு அரசியல் அமைப்புக்கள் அஞ்சுகின்றன. முகாம்கள் இலங்கைக்குள்ளேயே அமைக்கப்பட்டுள்ளன. முகாம்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

எனினும் சில நாடுகள் தமது இராணுவ முகாம்களை வெளிநாடுகளில் அமைத்துக்கொண்டு இலங்கையில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு கூறுகின்றன.

அதேவேளை தற்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு வடக்கில் உண்மையான மக்கள் பலமில்லை. அவர்கள் மக்களிடம் இருந்து தூர விலகி சென்றுள்ளனர்.

இராணுவத்தினர் மக்களை நெருகியுள்ளனர். வடபகுதி மக்களுக்கு ஈழம் தேவையில்லை. அவர்கள் மீண்டும் போரை விரும்பவில்லை.

உண்மையான சுதந்திரத்துடன் மனிதர்களாக வாழும் சுதந்திரமே அவர்களின் தேவையாக உள்ளது எனவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வடமாகாண தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

கடந்த 29 ஆம் திகதி தொடர்ச்சி....

(பூந்தோட்டம்)

வடமாகாண தமிழ் மொழித்தின போட்டிகள் கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**ஆக்கம் எழுத்து**
**பிரிவு-1**

அ. வெற்றிதரன் (யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), பீ.விபீசாளினி (வவு/ பூந்தோட்டம் ம.வி), செ. இமான் மொறியண்டயஸ் (மன்/ புனிதசவேரியார் ஆண்கள் பாடசாலை)

**கட்டுரைவரைதல்**
**பிரிவு-2**

ப. பவதாரிகன் (யா/ இந்துக் கல்லூரி), ந. அபிராமி (கிளி/திருவையாறு ம.வி), யு. தர்சிகா (மு/ வித்தியானந்தா கல்லூரி)

**கட்டுரைவரைதல்**
**பிரிவு-3**

சு. கஜனி (மு/ பாண்டியன்குளம் ம.வி), த.கேசிதா (யா/உடுவில் மகளிர் கல்லூரி), வி. ஆன் கில்டா (மன்/ தோட்டவெளி அ.த.க. பாடசாலை)

**கட்டுரைவரைதல், இலக்கியம் நயத்தல்**
**பிரிவு-4**

ரா. அப்ஷரா (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ம. பகிர்தா (மு/ கலைமகள் வித்தியாலயம்), பா. சிந்துஜா (கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**கட்டுரைவரைதல், இலக்கியம் நயத்தல்**
**பிரிவு-5**

க. கஜனா (யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), த. மேரி தயாளினி (மன்/ புனித வளனார் றோ.க. த. வித்தி), இ. மோகனவதனி (வவு/ வவுனியா இந்துக் கல்லூரி)

**இலக்கணப்போட்டி**
**பிரிவு-4**

கா. கீர்த்தனா (யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), த.தனுஜன் (வ/ கனகராஜன் குளம் ம.வி), சி. கௌதமன் (கிளி/ கிளிநொச்சி ம.வி), சி. தனஞ்சிகா (மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி)

**இலக்கணப்போட்டி**
**பிரிவு-5**

ப. சரண்யா(யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), செ. மயூசா (மு/ வித்தியானந்தா கல்லூரி), வி.டிலானி மேகலா (மன் /முருங்கன் ம.வி)

**திறனாய்வுப்போட்டி**
**பிரிவு-5**

லோ. தேனுஷா (யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), கே. அனோஜா (வ/ புதுக்குளம் ம.வி), இ. சாளினி (மு/ விசுவமடு ம.வி)

**குறுநாடக ஆக்கம்**
**பிரிவு-5**

தா. அமல்செபஸ்ரி (மன்/பத்திமா மத்திய ம.வி), பூ. சுலக்ஷி (மு/ வித்தியானந்தாக் கல்லூரி), ஜி. அபர்ணா (யா/ மகாஜனக் கல்லூரி)

**குறுநாடக ஆக்கம்**
**பிரிவு-4**

தே. உமையாழினி (யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி), அ.பா. நிபாயா (மன்/ அல்மினா ம.வி), செ. நிலானி (மு/ முல்லைத்தீவு கலைமகள் ம.வி)

**கவிதை ஆக்கம்**
**பிரிவு-4**

வ.விதுசா (யா/ வட மத்திய மகளிர் கல்லூரி), மோ. டிலோஜினி (கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி), ஞா. எஸ்தர் மாலினி (மன்/தூய ஜோசப்வாஸ் ம.வி)

**கவிதை ஆக்கம்**
**பிரிவு-5**

பு. ஆரத்தியா (யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), அ. அருண் (மன்/தூய ஜோசப்வாஸ் ம.வி), ஜெ. ஜெனாத்தகன் (மு/ மல்லாவி மத்திய கல்லூரி)

**சிறுகதை ஆக்கம்**
**பிரிவு-4**

ம. லூட்ஸ் பூரணி (யா/ மகாஜனாக் கல்லூரி), சி.விதுர்சனா (மு/முல்லைத்தீவு கலைமகள் ம.வி), அ.ப. ஸஹ்ரா (வவு/வவுனியா முஸ்லிம் ம.வி)

**சிறுகதை ஆக்கம்**
**பிரிவு-5**

அ. கஜன்(மு/மல்லாவி மத்திய கல்லூரி), சு. சோபிகா (யா/மகாஜனாக் கல்லூரி), ய. யொஸ்ரினா (கிளி/ வேரவில் இந்து ம.வி)

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு - விசேட பிரிவு**

செல்வந்தி காஞ்சனா (வ/ வவுனியா மடுகந்த ம.வி)

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் பேச்சு – விசேட பிரிவு**

நிர்மாணி வக்சலா (வவு/ வவுனியா அக்ரபோதி ம.வி)

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்துப்போட்டி**

கவிசா சந்தகெரணி (வ/ வவுனியா மடுகந்த ம.வி) (முற்றும்) (அ-266)

# சட்டவிரோத ஆட்கடத்தலுடன் அரசியல்வாதிக்கு தொடர்பு

சட்டவிரோத ஆட்கடத்தல் சம்பவங்களுடன் அரசியல்வாதி ஒருவருக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது என தகவல் தரவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவுக்குப் படகுமூலம் ஆட்களைச் சட்டவிரோதமாகக் கடத்தும் சம்பவத்துடன் பிரபல அரசியல்வாதி ஒருவருக்குத் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த 28ஆம் திகதி அவுஸ்திரேலியா நோக்கிச் செல்லத்திட்டமிட்டிருந்த 112பேர் கைது செய்யப்பட்டதனைத் தொடர்ந்து இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏழு முகவர்கள் கைது செய்யப்பட்ட போதிலும் பிரதான முகவர் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. அரசியல்வாதியின் பூரண அனுசரணையுடன் இந்தச் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது. (அ-2)

# புதையல் கொள்ளையில் பொலிஸ் மா அதிபர்

தமிழீழ விடுதலைப்புலிகளினால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களை மீட்கும் போர்வையில் புதையல் கொள்ளையில் ஈடுபட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர் கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு புதையல் கொள்ளையில் ஈடுபட்டதாக குறிப் பிடப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் உஹன, தாமன போன்ற பிரதேசங்களில் புலிகள் ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதங்களை மீட்கும் போர்வையில் தமக்கு நெருங்கியவர்களையும் நட்பான உத்தியோகத்தர்களையும் புதையல் கொள்ளையில் ஈடுபடுத்தியுள்ளார். பிரதிப்பொலிஸ் மா அதிபருக்கு ஆதரவு வழங்கிய இரண்டு உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்ற உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதையல் கொள்கைக்காக குறித்த பொலிஸ் அதிகாரி எம்பிலிப்பிட்டி பிரதேசத் தில் சிலரை கிழக்கு மாகாணத்திற்கு அழைத் துச் சென்றிருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுதங்களை மீட்கும் நோக்கில் மேற் கொள்ளப்படவிருந்த புதையல் கொள்கையை இடைநிறுத்துமாறு உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. (அ-2)


- தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

23

May 2012 to October 2012

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.06.2012 (சி/113)

# வளைய முடியாதவை முறிக்கப்பட்டுவிடும் இயற்கையின் விதிகளில் இதுவும் ஒன்று

விடுதலைப்புலிகள் எதை எதிர் பார்த்து ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவை ஆட்சிக்குக் கொண்டு வந்தார்களோ அது அவர்களின் வீழ்ச்சிக்குப் பின்னரே நிகழத் தொடங்கியுள்ளது. விடுதலைப் புலிகள் இல்லாத இலங்கைத்தீவு புலிகளின் கனவின் பின்னே போகத் தொடங்கிவிட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபச்சவை தெரிவு செய்தமை என்பது முழுக்க முழுக்க சமாதானத்துக்கு எதிரானதொரு தெரிவுதான். மேற்குலகின் அனுசரணையினு டனான ரணில் விக்ரமசிங்கவின் சமாதானமானது தம்மை நீர்த்துப் போகச் செய்யும் ஒரு பொறியே என்று விடுதலைப்புலிகள் அஞ்சி னார்கள் ரணிலைத் தோற்கடிப் பதன் மூலம் யுத்த அரங்கத்தை திறப்பதே விடுதலைப்புலிகளின் நோக்கமாக இருந்தது.

சமாதானத்தால் நீர்த்துப் போவதை விடவும் யுத்தத்தில் புதிய வாய்ப்புக்களை எதிர்பர்க்க முடியும் என்று நம்பியே விடுத லைப் புலிகள் மகிந்தராஜபக்ச வைத் தெரிவு செய்தார்கள். அவ ரைத் தெரிவு செய்தபோது விடு தலைப்புலிகளிடம் பல எதிர் பார்ப்புகள் இருந்தன.

அதாவது மகிந்த ராஜபக்ச ஒரு கடும் தேசியவாதி என்பதால் இனப்பிளவை மேலும் அதிகப் படுத்துவார் இதனால், இன வன் முறைகள் அதிகரிக்கும். எவ் வளவுக்கெவ்வளவு எதிர்த்தரப்பு

பொங்குதமிழ்

மூர்க்கத்தனமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு போராட்ட மும் வளரும்; கடும்போக்கான எதிர்த்தரப்பு இன அழிப்பை மேற்கொள்ளும்; இதனால், உலகம் தமிழர்களை நோக்கித் திரும்பும். எவ்வளவுக் கெவ்வளவு ஒடுக்குமுறை அதிகரிக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு சர்வதேச சமூகம் தமிழர்களின் போராட்டத் தில் உள்ள நியாயங்களை ஏற்றுக் கொள்ளும் நிலைமைகளும் அதிக ரிக்கும்; யுத்தத்தில் விடுதலைப் பிரதேசத்தை மேலும் விரிவு படுத்தினால் தமது பேரம்பேசும் சக்தி அதிகரிக்கும்; மகிந்த ராஜ பக்ச கடும் தேசியவாதி என்பதால் அதன் தர்க்கபூர்வ விளைவாக அவர் மேற்கிற்கு விருப்பமில்லாத ஒரு தலைவராக உருவாகுவார். அவருக்கும் மேற்குலகிற்கும் இடையிலான மேற்படி முரண் பாட்டைக் கையாள்வதன் மூலம் அந்த முரண்பாட்டை தமக்குரிய சர்வதேச அங்கீகாரமாக மாற்றி விடலாம், போன்றவையே அந்த எதிர்பார்ப்புகளாகும்.

விக்கிரமசிங்கவைத் தோற் கடித்தமையால், இந்தப் பிராந்தி யத்தில் மேற்கின் நிகழ்ச்சி நிரல் குழப்பப்பட்டது. மேற்குநாடுகள் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகத் தான் காணப்பட்டன. ஆனால், அதற்காக புலிகளை அங்கீகரிக்கும் அளவிற்கு அவர்கள் நெருக்கமாக வரத் தயாராக இருக்கவில்லை.

இந்தப் பிராந்தியத்தில் தமது நிகழ்ச்சி நிரலைக் குழப்பிய விடுதலைப் புலிகளை ஒரு நட்பு சக்தியாகப் பார்க்கும் அளவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் மேற்கிற் கும் இடையில் தவிர்க்கப்பட வியலாத நலன் சார் உறவு எதுவும் இருக்கவில்லை. அப்படி எதுவும் இருந்திருந்தால் விடுதலைப்புலிகள் சமாதானத்தை முறிக்கும் முடிவை எடுத்திருக்கமாட்டார்கள்.

எனவே மேற்கு நாடுகள் விடு தலைப் புலிகள் எதிர்பார்த்த அள விற்கு மகிந்த ராஜபக்சவிற்கு எதிரா கத் திரும்பவில்லை. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் திரும்ப வில்லை. மேலும் இது விடயத்தில் மேற்குநாடுகள் எடுக்கும் எந்த வொரு முடிவும் இந்தியாவை மீறிப்போக முடியாதளவிற்கு சீனாவிற்கு எதிரான வியூகத்தில் மேற்கும் இந்தியாவும் மிக நெருக் கமாகக் காணப்பட்டன; காணப் படுகின்றன. மகிந்தராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டுவந்ததன் மூலம் சீனாவின் செல்வாக்கு இலங் கைத் திவில் அதிகரித்துச் செல்ல, சீனாவுக்கு எதிராக இந்தியாவை மேலும் பலப்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கு ஏற் பட்டது. எனவே, இலங்கை விவ காரத்தில் இந்தியா எடுக்கும் முடிவே இறுதியானதாகக் காணப்பட்டது.

இத்தகைய ஒரு பிராந்திய மற் றும் சர்வதேச பின்னணியில் விடு தலைப் புலிகளைப் பொறுத்தவரை சமாதானக் களத்தைப் போலவே யுத்தகளத்திலும் மிகக்குறைந்த தெரிவுகளே இருந்தன.

அன்ரன் பாலசிங்கம் இதைத் தெளிவாக முன்னுணர்ந்திருந்தார். கிளிநொச்சிக்கான அவரின்


## வெற்றிக் கோபுரத்தைவிட்டு இறங்க எண்ணாத இலங்கை அரசின் நிலையும் இதுவே...!

கடைசி விஜயத்தின்போது, இதை இடித்துரைக்க முற்பட்டார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவரு டைய புத்திமதிகள் எடுபட வில்லை. பண்டைய கிரேக்கத்தின் ஸ்பாட்டா மக்களின் வீரத்தை எடுத்துக் காட்டும் *த்ரீ ஹண்ரெட்* (300 பருத்தி வீரர்கள்) திரைப்படத் தில் வரும் முடிவையே விடுதலப் புலிகளும் தெரிந்து எடுத்தார்கள். சாவுதான் முடிவு என்றபின் அது வரையிலும் சரணடையாது சண்டை யிடுவது என்பதே அந்தத் திரைப் படத்தின் முடிவாகும். யுத்தத்தில் சோர்ந்துபோகும் தனது தளபதி களுக்கும் இராஜதந்திர வழி முறைகளை வற்புறுத்திய இயக்கப் பிரதானிகளுக்கும் அவருடைய பதில் மேற்படி திரைப்படமாகத் தான் இருந்தது.

முடிவில் விடுதலைப்புலிகள் எதை எதிர்பார்த்து ராஜபக்சவை தெரிவு செய்தார்களோ அது நடக்க வில்லை. மாறாக அன்ரன் பாலசிங் கம் அஞ்சியது போலவே எல்லா மும் நடந்து முடிந்தது. ஆனால், விடுதலைப்புலிகள் இல்லாத இலங் கைத் தீவில் கடந்த மூன்றாண்டு களுக்குள் நிலைமைகள், விடுத லைப்புலிகள் விரும்பிய வழியி லேயே போகத் தொடங்கிவிட்டன.

இலங்கை அரசாங்கம், தானே தனது வெற்றியின் கைதியாக மாறிவிட்டது. இலங்கைத் தீவின் நவீன அரசியலில் வேறெந்தத் தலைவரும் பெற்றுத்தராத ஒரு வெற்றியை ராஜபக்ச சகோதரர்கள் சிங்கள மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார்கள். மக்களாலும் ஆட்சியாளர்களாலும் நம்பமுடியாத அளவிற்கு தாங்கமுடியாத வெற்றி அது. ஒரு தாங்க முடியாத வெற்றி அது என்பதலிருந்துதான் அதன் தோல்விகளும் ஆரம்பமாகின்றன.

அது தாங்கமுடியாத வெற்றி என்பதனால், அரசாங்கம் நிதானம் இழந்து விட்டது. அந்த வெற்றியை அதன் எல்லாப்பரிமாணங்களோடும்



விளங்கிக் கொள்ளத் தவறிவிட் டது. ஒரு பிரமாண்டமான வீரப்ப டிமம் அரசாங்கத்தைச் சுற்றி கட்டி யெழுப்பப்பட்டுவிட்டது. நவீன இராஜதந்திர உறவுகளில் முக்கியத் துவம் அற்ற வீரம், ரோசம், மிடுக்கு, இனமானம் போன்ற இன்னோரன்ன அம்சங்களின் கலவையாக கட்டியெழுப்பப்பட்ட மேற்படி வீரப்படிமம் ஆனது உள்நாட்டில் அரசியலை வெற்றி கரமாக நடத்த உதவக்கூடும். ஆனால், சர்வதேச உறவுகளில் இலங்கைத் தீவைப்போன்ற மிகச்சிறிய நாடுக ளைப் பொறுத்தவரை அது எதிர் மறை விளைவுகளையே தரும்.

விடுதலைப்புலிகளை தோற் கடித்த வீரம்மிக்க அரசுக்கு எந்த வொரு வெளிநாடும் பாடம் சொல் லித்தரத் தேவையில்லையென்று இலங்கை அரசாங்கம் நம்புகிறது. ஆனால், உண்மையில் நந்திக்கட லில் பெற்ற வெற்றி எனப்படுவது தனியே இலங்கை அரசாங்கத்தால் மட்டும் பெறப்பட்ட ஒரு வெற்றி யல்ல. அது ஒரு கூட்டுவெற்றி. கூட்டுப்படைகள் கலந்துகொள் ளாத கூட்டு வெற்றி. ஐ.நா தலை யிடாது, விலகி நின்றமை என்பது ஒரு கொள்கைத் தீர்மானம் தான். யுத்தத்தின் இறுதிக்கட்த்தில் அமெரிக்காவும், ஐ.நா.வும் தலை யிடாமல் விலகி நின்றிருக்கா விட் டால் இப்படியொரு தாங்கமுடி யாத வெற்றியை அரசாங்கம் கற் பனை செய்திருக்கவே முடியாது.

சில விமர்சகர்கள் இதனை ஐ.நா.வின் கையாலாகாத்தனம் அல்லது பொறுப்பற்றதனம் என்று வர்ணிக்க முற்படுகின்றனர். ஆனால், 4ஆம் கட்ட ஈழப்போரின் இறுதியில் ஐ.நா. தலையிடாது விலகி நின்றமை எனப்படுவது ஒரு கொள்கைத் தீர்மானம்தான்.

எனவே வெற்றிக்கு ஒத்து ழைத்த தரப்புகளைத் திருப் திப்படுத்தாவிட்டால், வெற்றியை பாதுகாக்க முடியாது என்ற மிக சாதாரண உண்மை கொழும்பால் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

இந்தியாவுடனான நல்லுறவை பேணியபடியே சீனாவை உள்ளே வரவிடும் வெளியுறவுக் கொள்கை சந்தித்த முதல் அதிர்ச்சியாக ஐ.நா. தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்ததைக் கூறலாம். இந்தி யாவைப் பகைத்துக் கொண்டு சீனாவை உள்ளே வரவிட்டால் தானே பிரச்சினை எனவே, இந்தி யாவை அணைத்துக் கொண்டே சீனாவுக்கும் நாட்டைத் திறந்து விடுவதே இலங்கை அரசாங் கத்தின் பிராந்தியக் கொள்கை யாகக் காணப்படுகிறது.

இந்தப் பிராந்தியத்தின் வரலாற் றிலேயே இந்தியாவின் தென் மூலையில் சீனர்கள் இவ்வளவு செறிவாக பிரசன்னமாகி இருப் பது இதுதான் முதற்தடவை. முன்னெப்பொழுதும் இவ்வளவு செறிவாக சீனர்கள் இந்தியாவின் தெற்கு மூலையில் நடமாடியது இல்லை. *(தொடரும்)*

# தாய்லாந்து, இலங்கைக்கு இடையில் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்து



(கொழும்பு)

இலங்கையின் விவசாயம், கடற்றொழில், கல்வித்துறை மேம்பாட்டுக்காக தாய்லாந்து பூரண ஒத்துழைப்பு வழங்கும் என தாய்லாந்தின் பிரதமர் யின்லக் சினவத்ரா தெரிவித்துள்ளார்.

இருநாடுகளின் பௌத்த மத, கலாசார செயற்பாடுகளில் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் அண்மையில் கைச்சாத்திடப்பட்டன.

இருநாட்டு வெளிவிவகார அமைச்சுக்களுக்கு இடையில் குற்றச் செயல்களைப் பொறுத்தவரை அந்நியோன்ய சட்டரீதியான ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் இரு தரப்பு ஒப்பந்தத்தை வலுவூட்டுவதே மற்றைய ஒப்பந்தமாகும். இலங்கை ஜனாதிபதி, தாய்லாந்து பிரதமர் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

பயங்கரவாதத்தை ஒழித்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அரசு அவதானம் கொண்டுள்ளது. இந்நிலையில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும்.

இருநாடுகளுக்கு இடையில் வர்த்தக, முதலீட்டு மட்டங்களை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்த குழுவை அமைப்பதன் அவசியம் பற்றியும் இரு நாட்டு தலைவர்களும் ஆராய்ந்தனர்.

மாணிக்கக்கல் ஆபரணத்துறை தொடர்பாகவும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் இலங்கைக்கு தேவைப்படும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெற்றுத்தருமாறு விடுப்பட்ட கோரிக்கைக்கு தாய்லாந்தின் பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

இதற்கான ஒன்றிணைந்த குழுவை நியமிக்கவும் தாய்லாந்து பிரதமர் யோசனை தெரிவித்தார். இலங்கையில் நிர்மாண முதலீடு தொடர்பாக ஊக்குவிப்பதை குறிப்பிட்ட ஜனாதிப்தி உல்லாச கைத்தொழிலில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி தொடர்பாகவும் விளக்கம் அளித்தார்.

2015-2017 மனித உரிமைகள் குழுவில் தாய்லாந்தின் பிரதிநிதித்துவத்துக்கு இலங்கையின் ஒத்துழைப்பை பெற்றுத்தருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இரு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்களின் செயற்பாடு தொடர்பாக கருத்துப் பரிமாறலில் ஒருமித்து செயற்படும் தேவை பற்றி இரு தலைவர்களும் அவதானம் செலுத்தினர். (அ-2)

## பாடசாலை மாணவர்களுக்கான வைத்திய பரிசோதனை

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய பணிமனைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சுகாதார வைத்திய பரிசோதனை செயற்பாடுகள் ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார வைத்திய பரிசோதகர் செ. அரவிந்தன் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/ மாங்குளம் மகா வித்தியாலயத்தில் 1,4,7,10 தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி கே. கலைச்செல்வன் மேற்கொள்ளவுள்ளார்.

மு/ மாங்குளம் மகா வித்தியாலயத்தில் மேற்படி தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் பாடசாலைக்கு மாணவர்களை தவறாது அனுப்பிவைக்குமாறு ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார வைத்திய பரிசோதகர் கேட்டுள்ளார். (அ-3-15)

## பாராளுமன்றில் மின்சாரத்தை சேமிக்க சம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

பாவனை செய்யப்படும் பாராளுமன்றில் மின்சாரத்தை சேமிக்கவும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என மின் வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதன்மூலம் மின்சாரத்தை பாரிய அளவில் சேமிக்க முடியும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சேமிப்பு குறித்து கடந்த 30 ஆம் திகதி பாராளுமன்ற உத்தியோகத்தர்களுக்கு தெளிபுபடுத்தும் வேலைத்திட்டமொன்று இடம்பெற்ற போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவது தனக்கும் நாட்டுக்கும் செய்யும் நற்செயல் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## தீயில் கருகிய நிலையில் இரு சடலங்கள் மீட்பு

கஹவத்தை வராபிட்டி பகுதியில் தீ விபத்துக்குள்ளான வீடொன்றிலிருந்து தீயில் கருகிய நிலையில் இரு பெண்களின் சடலங்கள் நேற்றைய தினம் காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சகோதரிகளான 52 மற்றும் 61 வயதுடையவர்களின் சடலங்களென அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ-2)


சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள்
தேவஸ்தான முருகப் பெருமான்

சித்திரத்தேர் வெள்ளோட்டம்



நந்தன வருஷம் வைகாசி 19 ஆம் நாள் (01.06.2012)
வெள்ளிக்கிழமை மாலை 4.00மணி

- இறைவணக்கம்
- தலைமையுரை- வைத்தியகலாநிதி ஆ.சிவபாதம் (தலைவர், ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகத்தா சபை)
- ஆசியுரை- சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் (சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி, சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய பிரதம குரு)
- அருளுரை -ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஞானசம்பந்தர் குருமஹா சந்நிதானம்)
- வாழ்த்துரை- கலாநிதி ஆறுதிருமுருகன் (தலைவர், தெல்லிப்பளை துர்க்கை அம்பாள் ஆலயம்)
- கௌரவிப்பு
- நன்றியுரை

விசேட மங்கள இசை- நவினோதன் குழுவினர் (சுதுமலை)

உருவாக்கம்- சிற்பமாமணி சிற்ப கலாரத்ன கடம்பமாமணி சிற்பாச்சாரியர் நடராசா சிவபாலன்கோணேஸ்வரன் கலைஞர் (பொன்னம்பலம் வீதி ஆலடி காரைநகர்)

அம்பிகை அடியார்கள் அனைவரும் வருக!
அன்னையின் அருள் பெறுக!

சுதுமலை

சித்திரத்தேர் திருப்பணி
கணவதிப்பிள்ளை பேரம்பலம் குடும்பம்
சதுமலை வடக்கு, மானிப்பாய்.

(8533)




# பொல்லாத சிற்றப்பன்கள்

பரமசிவம் ஓர் அநாதைச் சிறுவன். சிறு வயதிலேயே தாய், தந்தையரை இழந்த அவனை அவனுடைய பாட்டி தான் வளர்த்தாள். வீட்டு வேலைகள் அனைத்திலும் பரமசிவம் பாட்டிற்கு மிகவும் உதவியாக இருந்தான். பாட்டியிடம் மிகவும் பரிவுடன் நடந்து கொள்வான்.

பரமுவின் பள்ளி காலை நேரத்தில்



மட்டுமே செயற்பட்டு வந்தது. பிற்பகல் முதல் விடுமுறை. பள்ளியிலிருந்து மதிய உணவிற்கு பரமு தவறாமல் குறித்த நேரத்தில் வீட்டிற்கு வந்து விடுவான். பாட்டி அன்புடன் சமைத்து வைத்து இருப்பதை ஆசையுடன் உண்டான். வயதான பாட்டிக்கு எல்லாவற்றிலும் துணையாக இருந்த பரமுவின் மீது பாட்டி உயிரையே வைத்து இருந்தாள்.

ஒருநாள் பள்ளியிலிருந்து திரும்பிய பரமு தன் வீட்டில் இரண்டு விருந்தாளிகள் அமர்ந்து இருக்கக் கண்டான்.

பரமு! உன்னுடைய சித்தப்பாக்கள் வந்திருக்கிறார்கள் பார் என்று

## அம்புலி மாமா கதைகள்

பாட்டி அவனுக்கு அவர்களை அறிமுகப்படுத்தினாள். பின்னர் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டனர். சாப்பிடும் போது அவர்கள் தங்களுக்குள் ஏதோ இரகசியம் பேசிக்கொண்டேயிருந்ததை பரமு கவனித்தான்.

ஒருநாள் அவர்கள் வீட்டில் தங்கிய பின்னர், அந்த இருவரும் பாட்டியிடம், பாட்டி! நாங்கள் பரமுவை சிலநாட்கள் எங்கள் கிராமத்திற்கு அழைத்துச் செல்கிறோம். அவனுடைய ஏனைய உறவினர்கள் அவனை சந்திக்க ஆவலாக உள்ளனர்! என்றனர்.

ஆனால், பரமுவிற்கு அவர்களுடன் செல்ல விருப்பமே இல்லை. பாட்டி பரமு! போய் வா! என்று சொன்னதனால் வேண்டாவெறுப்பாக அவர்களுடன் சென்றான்.

மூவரும் சிறிது தூரம் சென்ற பின்னர், அவர்கள் இருவரும் தங்களுடைய பெட்டியையும், ஒரு கூடையையும் பரமுவைச் சுமந்து வரச் சொல்லி கட்டளையிட்டனர். பரமு அவற்றை மிகவும் சிரமத்துடன் தூக்கிச் சென்றான்.

சிறிது நேரத்தில் அவர்கள் ஒரு கிராமத்தை அடைந்தனர். இதுதான் என்னுடைய உறவினர்கள் வசிக்கும் கிராமமா? என்று பரமு கேட்டதும், அர்களில் ஒருவன், இந்த கிராமத்தில் இல்லை. அது வேறு ஒரு கிராமம். நீ இங்கேயே உட்கார்ந்து கொண்டு எங்களுடைய கூடையைப் பார்த்துக் கொள். நீ எங்கும் போகாமல் இங்கேயே உட்கார்ந்திருக்க வேண்டும்! புரிந்ததா? என்று அதிகாரக் குரலில் சொன்னான். மற்றொருவன், இதோ பார்! அந்தக் கூடையைத் திறந்து பார்க்காதே! ஏனெனில் அதனுள் ஒரு விஷப்பாம்பு இருக்கிறது. அதனால் விஷமம் எதுவும் செய்யாமல் இங்கேயே உட்கார்ந்திரு! என்றான்.

சென்றவர்கள் திரும்பி வருவதற்காகப் பரமு வெகுநேரம் காத்திருந்தும், அவர்கள் வந்த பாடில்லை. பரமுவிற்கோ பசி வயிற்றைக் கிள்ளியது. கூடையிலுள்ள விஷப்பாம்பை ஒருமுறை பார்க்கலாம் என்ற ஆவல் தோன்ற, மெதுவாக கூடையின் மேல் மூடியைத் திறந்தான். அவன் எதிர்பார்த்தபடி பாம்பு ஒன்றும் சீறிக் கொண்டு வரவில்லை. பதிலாக மடித்து வைத்த ஒரு துண்டு தான் காணப்பட்டது. ஒரு வேளை துண்டின் அடியில் பாம்பு இருக்குமோ என்று பலமுறை கூடையின் அடிப்பாகத்தை தன் காலினால் உதைத்துப் பார்த்தான். ப்ாம்பு இருப்பதற்கான அறிகுறியே தென்படவில்லை. பின்னர், ஒரு குச்சியினால் துண்டை விலக்கினான். உள்ளே பாம்பு இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக அதில் உணவுப் பண்டங்கள் இருந்தன.

தாங்கமுடியாத பசியினால் துடித்த பரமு, வந்தது வரட்டும் என்று அதில் இருந்தவற்றை ஒரு கை பார்த்தான். பின்னர், பழையபடி துண்டை வைத்து மேல் மூடியைக் கவிழ்த்து கூடையை மூடி வைத்தான்.



உள்ளே உணவுப் பண்டங்களை வைத்து விட்டு பாம்பு இருக்கிறது என்று அவர்கள் ஏன் என்னிடம் பொய் சொல்ல வேண்டும்? என்று யோசித்தான். சரிதான்! இருவரும் சரியான மோசடிக்காரர்கள். இவர்கள் கையில் சிக்காமல் தப்பித்து ஓடி விடலாம் என்று தோன்றவே, உடனே தன் கிராமத்தை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

தன்னுடைய கிராமத்திற்குத் திரும்பிச் செல்லும் வழி அவனுக்கு சரியாகத் தெரியவில்லை. கால்போன போக்கில் சென்று கொண்டிருந்தவன் முன் திடீரென இரு அரண்மனைக் காவலர்கள் தோன்றினர். அவர்களில் ஒருவன் பரமுவிடம் தம்பி! நீ யார்? எந்த ஊர்? என்று கேட்க, பரமு, ஐயா! என் பெயர் பரம



சிவம்! தர்மபுரி கிராமத்தைச் சேர்ந்தவன். உறவினர்களிடம் அழைத்துப் போகிறேன் என்று பொய் சொல்லி விட்டு என்னை இரு மோசடிக்காரர்கள் என் பாட்டியிடம் இருந்து அழைத்து வந்து, பாதி வழியில் விட்டுவிட்டு ஏதோ வேலையாகச் சென்று இருக்கிறார்கள். அவர்களுடைய கூடையை அப்படியே விட்டுவிட்டு நான் ஓடி வந்து விட்டேன்! என்றான்.

ஆகா நீ கூறுவதைப் பார்த்தால் நாங்கள் தேடி வரும் திருடர்கள் நீ குறிப்பிடும் அந்த ஆட்கள்தான் என்று தோன்றுகிறது. அவர்கள் எப்படி இருந்தார்கள் என்று விளக்கிக் கூறு! என்றான் மற்றொரு காவலன். பரமு அவர்கள் இருவரின் தோற்றத்தை வர்ணித்ததும் தாங்கள் தேடும் திருடர்கள் அவர்கள் தான் என்று காவலர்களுக்குத் தெரிந்துவிட்டது.

தம்பி! அந்தத் திருடர்கள் அரண்மனையில் புகுந்து நகைகளைத் திருடியுள்ளனர். அவர்களைத் தான் நாங்கள் தேடுகிறோம். அவர்கள் பெட்டியை வைத்துள்ள இடத்தைக் காட்டு! அவர்கள் நிச்சயம் கூடையை எடுத்துப் போக வருவார்கள். அப்போது அவர்களைப் பிடித்து விடலாம்! என்றான் காவலர்களில் ஒருவன்.

பின்னர் மூவரும் அந்த இடத்தை நோக்கிச் சென்றனர். இரண்டு திருடர்களும் அந்த இடத்திற்கு வந்து, கூடையை எடுத்துக் கொண்டு, பரமுவைத் தேடிக் கொண்டிருந்தனர்.

ஒரு காவலன், பரமு! நீ அவர்களிடம் செல்! நாங்கள் மறைந்து வந்து அவர்களைப் பிடித்து விடுகிறோம்! என்று சொல்லிவிட்டு, மரங்களின் இடையே மறைந்து வந்து அவனை அணுகினர்.

அதற்குள் பரமுவைப் பார்த்து விட்ட திருடர்கள், முட்டாளே! என்ன மடத்தனம் செய்தாய்? பெட்டியை இப்படி விட்டுவிட்டுப் பேரகலாமா? என்று பாய்ந்து வந்து அவனைப் பிடித்தனர்.

அறிவு கெட்ட பைத்தியமே! எங்கே தொலைந்து போனாய் நீ? என்று இருவரும் அவனை அடிக்க முயன்றனர். அதற்குள் காவலர்கள் இருவரும் திருடர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டனர்.

திருட்டுப் பயல்களா! உங்கள் கைவரிசையை கடைசியில் அரண்மனையிலேயே காட்டி விட்டீர்களா! எங்கேயடா .நகைகள்? என்று காவலர்கள் அவர்களை அடித்து உதைத்தனர்.

அடி பொறுக்காமல் அலறியவர்கள், நாங்கள் அதைச் சேட்டிடம் விற்றுவிட்டோம்! என்றனர். உடனே, காவலர்கள் அவர்களை சேட் கடைக்கு அழைத்துச் சென்று நகைகளை மீட்டனர். பின்னர், அவர்கள் திருடர்களையும், பரமுவையும் மன்னரிடம் அழைத்துச் சென்றனர். திருடர்கள் இருவருக்கும் சிறைத் தண்டனை விதித்த மன்னர், அவர்களைப் பிடிக்க உதவியாக இருந்ததற்காக பரமுவைப் பாராட்டி வெகுமதிகள் அளித்தார். பின்னர், அவனைத் தகுந்த துணையுடன் அவனுடைய கிராமத்திற்கு அனுப்பி வைத்தார்.

பாட்டி! என்று கூவிக் கொண்டே



பரமு பாட்டியை அனைத்துக் கொண்டு பரபரப்புடன் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒன்று விடாமல் விளக்கிக் கூறினான். மன்னர் தனக்கு அளித்த வெகுமதிகளையும் பாட்டியிடம் காட்டினான்.

அவனை ஆசை தீர அணைத்துக் கொண்ட பாட்டி, பரமு! இத்தனை சின்னக் குழந்தையான நீ எத்தனை சாமர்த்தியமாக அவர்களைப் பிடித்துக் கொடுத்து விட்டாய்! என் சமத்துக்கண்ணு! என்று பரமசிவத்தை வாஞ்சையுடன் கொஞ்சினாள்.

# இனந்தெரியாத நபர்கள் குடும்பஸ்தர் மீது தாக்குதல்

## சந்தேகத்தில் இருவர் கைது

(பருத்தித்துறை)

குடும்பஸ்தர் ஒருவர் கோவிலில் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் கரவெட்டி மத்தி அத்துழு அம்மன் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி மக்கள் வங்கி கிளை உத்தியோகத்தரும் கரவெட்டி மத்தி தச்சன் தோப்பைச் சேர்ந்தவருமான கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (வயது 54) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் அப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்டு நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தில் பிடிக்கப்பட்டவர்கள் மது போதையில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(அ-3-10)

# கொள்ளையர்களை கண்டுபிடிக்க 10 இலட்சம் ரூபா சன்மானமாம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தேசிய நூதனசாலையில் கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி இரவு இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் குறித்து விஞ்ஞான ரீதியில் சில தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நூதனசாலையில் களவாடப்பட்ட புராதன தொல்பொருட்கள் கண்டி இராசதானிக்கு சொந்தமானது என்பதோடு வரலாற்றில் திரும்பப் பெற முடியாதவையாகும்.


எனவே, கொள்ளையிடப்பட்ட புராதன தொல்பொருட்கள் வைத்திருப்பவர்கள் குறித்து தகவல் அறிந்தால் உடனடியாக 011 2328138 அல்லது 011 2320141 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல் தருமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

தரப்படும் தகவல் வெற்றியளித்தால் தகவலுக்குச் சொந்தக்காரருக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

(அ-9)

# தேசிய மட்டத்திற்கு தெரிவாகினர்





(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலைகள் மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளை சேர்ந்த இரண்டு மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட தமிழ்த்தின போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

இதில் பிரிவு 3 இல் கட்டுரை வரைதல் போட்டியில் மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலய மாணவி சுரேந்திரகுமார் கஜனி, பிரிவு 5 இல் சிறுகதை ஆக்கப் போட்டியில் மு/மல்லாவி மத்திய கல்லூரி மாணவன் அமிர்தலிங்கம் கஜன் ஆகிய மாணவர்களே தேசிய மட்ட தமிழ்த்தின போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

(அ-3-15)

# வவு/முருகனூர் சாரதா வித்தி அதிபர் மீது தாக்குதல் சம்பவம்

(பூந்தோட்டம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை பொருளாளரும் வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தின் அதிபருமான நேசராஜா மீது கோமரசன்குளம் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்கள் பாடசாலைக்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரியவருவதாவது,

கோமரசன்குளம் பாடசாலை மாணவர்கள் 17 பேர் மேற்கொண்ட அணியினர் பாடசாலை சீருடை மற்றும் கழுத்துப்பட்டி அணிந்து சாரதா வித்தியாலயத்தினுள் புகுந்து அங்கு தனது அலுவலகத்தில் கடமையில் இருந்த அதிபரை கடுமையாக தாக்கியுள்ளனர். இதனை அறிந்த பாடசாலை ஆசிரியர்கள்மற்றும்மாணவர்கள் கூக்குரல் இட அப்பகுதி மக்கள் பாடசாலைக்கு வரவே மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறியுள்ளனர்.

எனினும் பொது மக்கள் ஒன்று திரண்டு மாணவர்களை பிடித்து வைத்திருந்ததுடன் அவ்விடத்திற்கு வருகை தந்த கோமரசன்குளம் அதிபருடனும் வாக்குவாதப்பட்டுள்ளனர்.

எனினும் மாணவர்கள் சீருடையில் காணப்பட்டமையினால் தாம் அவர்கள் மீது தாக்கவில்லை என பொதுமக்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் முருகனூர் சாரதா வித்தியாலய அதிபர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் கோமரசன்குளம் பாடசாலை மாணவர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை,வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜாவும் முருகனூர் பாடசாலைக்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

கோமரசன்குளம் மகா வித்தியாலயத்தில் இருந்து மாணவர்கள் சிலரை காதல் விவகாரத்தால் தற்காலிகமாகவும் ஒரு மாணவனை நிரந்தரமாகவும் பாடசாலையை விட்டு நிறுத்தியமை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளையினர் கூடுதல் கவனம் செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-2-266)


## நீங்கா நினைவில் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08 . 10 . 1976

இறப்பு 04 . 06 . 2009



திதி:-01.06.2012

### அமரர் திரு.பற்குணம் சதீஸ்குமார்

(Dip.In.Nurshing)தாதிய உத்தியோகத்தர்-யாழ்.போதனா வைத்தியசாலை

எண்ணம்போல் வாழ்வொன்று இனிதாக அமைந்திடுமென
திண்ணமாய் நம்பியிருந்தோம் தீதேதும் நினைக்கவில்லை உன்
வண்ணச் சிரிப்பழகும் வடிவழகு வதனமும் இன்றளவும்
எண்ணத்தில் நின்றாடி இதயத்தை பிழியுதடா சதீஸ்
மண்விட்டு நீ மறைந்ததோடி மூன்றாண்டு ஆனாலும்
கண் விட்டு அகலவில்லை உன் உருவம்,பாதி வழியில்
விண்ணுக்கு விரைந்தோடி நீ போனாலும் உன் குரல்
பண்ணாக செவியினில் ஒலிக்குதடா அன்புச் சோதரனே
ஆண்டுகள் எத்தனை அடுக்கடுக்காய் கழிந்தாலும்
மீண்டும் ஒரு தடவை நீ வருவாய் என காத்துள்ளோம்!
ஆண்டவனை நினைக்கும் அத்தனை பொழுதுகளிலும்
மீண்டும் உன் உடன் பிறப்பாகிடவே வேண்டுகின்றோம்

(8541)

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்



## வருஷாப்திய அழைப்பும் 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலியும்

### அமரர் சதாசிவஐயர் சுப்புலெட்சுமி

(திதி:-திரயோதசி,பிரதோஷம்)

மலர்வு 12.06.1925

உதிர்வு 13.06.2011



தென்னிந்திய கேரள மாநிலம் பாலக்காட்டை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்டு 13.06.2011 இல் சிவபதமடைந்த எமது அன்புத் தாய் அமரர் சதாசிவஐயர் சுப்புலெட்சுமி அம்மா அவர்களின் 1 ஆம் ஆண்டு வருஷாப்திய நினைவு அஞ்சலி நிகழ்வும்,ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் அவரது கொக்குவில் மேற்கு ஐயனார் கோவிலடி இல்லத்தில் நாளை 02.06.2012 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
தகவல் அன்பு மகன் ச. பாலச்சந்திரசர்மா

# அவுஸ். அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளை உயர்ஸ்தானிகர் கையளித்தார்

(பூந்தோட்டம்)



யு.என்.கபிட்டாட் நிறுவனமானது அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மலையாளபுரத்தில் அமைத்திருந்த வீடுகளை பயனாளிகளிடம் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் றொபின் மூடி கையளித்தார்.

இவ்வீடுகளை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யுத்தத்தால் பகுதியளவில் பாதிப்படைந்த நிலையில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் புனரமைக்கப்பட்ட 5 வீடுகளை அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பயனாளிகளிடம் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் வவுனியா மன்னகுளம் பகுதியிலும் முழு அளவில் சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட் டத்தினையும் அவுஸ்திரேலிய தூதுவர் பயனாளிகளிடம் வழங்கியிருந்தார்.

கடந்த திட்டத்தில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 3 ஆயிரத்து 785 வீடுகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் அமைத்து கொடுத்திருந்த நிலையில் 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுவரையான திட்டத்தில் 23 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியில் 2 ஆயிரத்து 700 புதிய வீடுகளையும் ஆயிரத்து 950 பகுதியளவிலான வீடுகளையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் யு.என்.கபிடாட் நிறுவனத்தின் மூலம் அமைத்து வருகின்றது.

இத்திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 121 வீடுகளில் தலா 5 இலட்சம் வீதம் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 200 வீடுகளும் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 300 வீடுகளுமாக 500 வீடுகளை முழுமையாகவும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் பூநகரி பிரதேச செயலகத்தில் 58 வீடுகளும் கண்டாவளை பிரதேச செயலகத்தில் 161 வீடுகளையும் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 402 வீடுகளுமாக 621 வீடுகள் ஐரோப்பிய ஒன்றியம், சுவிஸ் அபிவிருத்தி அமைப்பு மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பகுதியளவில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், யு.என்.கபிடாட்டின் தேசிய திட்ட முகாமையாளர் ஐ.எம்.கமீட், சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் டிம்மக்னார், அறிக்கையிடல் உத்தியோகத்தர் சாமலி வவுனியா மாவட்ட பிரதி திட்ட முகாமையாளர் கே.பத்மானந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (அ-266)

# உயிரை பாதுகாத்த பொலிஸாருக்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் பரிந்துரை

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உயிரை பாதுகாத்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இன்னமும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. டக்ளஸ் மீது தாக்குதல் நடத்த வந்த பெண்ணை சோதனையிட்ட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குண்டு வெடித்ததில் படுகாயமடைந்தனர்.

கடந்த 2004 ஜுலை 7 இல் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் காயமடைந்த உத்தி யோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் தேவானந்தா பொலிஸ் திணைக்களத் திற்கு பரிந்துரை செய்துள்ளார். உயிரை பாதுகாத்த உத்தியோகத்தர்களில் சிலர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டுள்ளனர். (அ-2)

# சர்வதேச நாணய நிதியத்திடம் மீண்டும் 500 மில்லியன் டொலர் கோருகிறது இலங்கை

(கொழும்பு)

அரசாங்கம் ஏற்கனவே பல பில்லியன் தொகையிலான பாரிய வெளிப்படு கடன்களை கொண்டுள்ள நிலையில் மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கோரியுள்ளது.

இதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகும் என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். இந்த கடன் மூலம் எரிபொருள் விலையேற்றம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பவற்றை கட்டுப்படுத்தும் பணிகள் மேற் கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்ற 2.6 பில்லியன் டொலர்களை பெற்று அதனை உரிய முறையில் செலுத்த முடிந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை 7.2 வீதமாக வைத்திருக்க முடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். எனினும் இலங்கையின் இந்த புதிய கடன் கோரிக்கைக்கு சர்வதேச நாணய நிதியம் இன்னும் பதில் வழங்கவில்லை. (அ-2)

# ஒழுக்காற்று விசாரணையிலிருந்து சண்டியர் மேர்வின் விடுதலை

ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டுக்களிலிருந்து அமைச்சர் மேர்வின் சில்வா விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுவினால் மேர்வின் சில்வாவிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு வந்தது.

ஊடகங்களில் வெளியான தகவல்கள் பிழையானவை எனவும் அவ்வாறான கருத்துக்களை தாம் வெளியிடவில்லை எனவும் அமைச்சர் ஸ்ரீல்ங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இந்த விளக்கத்தை பரிசீலனை செய்த மத்திய செயற்குழு, அமைச்சர் குற்றமற்றவர் என தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஊடகங்களில் வெளியாகும் தகவல்கள் அனைத்துமே உண்மையில்லை என அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். (அ-7)

# ஆளுநர் அலுவலகம் திறந்துவைப்பு

வட மாகாண ஆளுநர் அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள பழைய பூங்கா வளாகத்தினுள் அமைக்கப்பட்டு வந்த மேற்படி அலுவலகத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இதுவரை வாடகை கட்டடத்தில் வடமாகாண ஆளுநர் அலுவலகம் செயற்பட்டு வந்தது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர்மேயர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உள்ளிட்ட வடமாகாணத்திலுள்ள சகல துறைகளையும் சார்ந்த அதிகாரிகள் பங்கு கொண்டிருந்தனர். (அ-6)


காரைநகர்
கிழவன் காடு கலாமன்றம்
நடாத்தும்

கலைவிழாவும்
பரிசளிப்பு விழாவும் -2012
அழைப்பிதழ்

காலம்:- 2012.06.03 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணி
இடம்:- கலாமன்றம் கலையரங்கு,புதுறோட்,காரைநர்

தலைவர்
திரு.N. சோதிநாதன் அவர்கள்
( தலைவர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

பிரதம விருந்தினர்
திரு.P. விக்கினேஸ்வரன் அவர்கள்
( வடமாகாண கல்விப்பணிப்பாளர்)

சிறப்பு விருந்தினர்
திருமதி.தேவநந்தினி பாபு அவர்கள்
( பிரதேச செயலர், பிரதேச செயலகம்,காரைநகர்)
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள்
( தலைவர்,துர்க்காதேவி தேவஸ்தானம் ,தெல்லிப்பளை)
திரு.P. நந்தகுமார் அவர்கள்
( சுகாதார வைத்திய அதிகாரி,தெல்லிப்பளை)

கௌரவ விருந்தினர்
சங்கீதகலாபூஷணம். திரு.சு. கணபதிப்பிள்ளை அவர்கள்
(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்)
திரு.S.சிவஞானம் அவர்கள்
( கௌரவ உறுப்பினர்,கிழவன்காடு கலாமன்றம்,காரைநகர்)

நிகழ்ச்சி நிரல்
★ மங்கலவிளக்கேற்றல்
★ இறைவணக்கம்:-கலாமன்ற இசைத்துறை மாணவிகள்
★ வரவேற்புரை:- திரு.இ.திருப்புகலூர்சிங்கம்
(செயலாளர், கிழவன் காடு கலாமன்றம்,காரைநகர்)
★ ஆசியுரை:- சிவ ஸ்ரீ .ஈஸ்வரக்குருக்கள் அவர்கள்
(பிரதம குரு, ஈழத்துச்சிதம்பரம்,காரைநகர்
★ தலைமையுரை
★ கலாமன்ற அறநெறி துறையினர் வழங்கும் பேச்சு
★ கலாமன்ற நாடகத்துறையினர் வழங்கும் வசந்தம் கூத்து
★ கௌரவ விருந்தினர் உரை
★ கலாமன்ற இசைத்துறையினர் வழங்கும் இசைக்கச்சே[illegible]
★ சிறப்பு விருந்தினர்கள் உரை
★ கலாமன்ற யோகாசன தியானத்துறையினர் வழங்கும்
அரங்க அற்றுகை
யாழ்.மாவட்ட இளம் மிருதங்கக் கலைஞர்கள் வழங்கும் மிருதங்க இசை
★ பிரதம விருந்தினர் உரை
★ பரிசில் வழங்கல்
★ கலாமன்ற நடனத்துறையினர் வழங்கும் நாட்டியாஞ்சலி
★ சிறப்புப் பட்டிமன்றம்
தற்போது எமது பண்பாடு, கலாசார விழுமியங்கள்
சீரழிக்கப்படுகின்றதா! சீரழியவில்லையா!

நடுவர்
தமிழருவி.காரை.த.சிவகுமாரன் (B.A.Hons)
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்/தலைவர், வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கம்)

| சீரழிக்கப்படுகின்றது | சீரழியவில்லை |
| --- | --- |
| திரு.N. விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர், வலம்புரி பத்திரிகை யாழ்ப்பாணம்) | திரு.A. ரகுநாதன் (மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர், யாழ்ப்பாணம்) |
| காரை திரு.N. கணேசமூர்த்தி (ஆசிரியர்,கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) | காரை திரு.S. கெங்காதரன் (சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம்,வவுனியா) |
| திரு.பரா.றமேஸ் (காணி மாவட்டபதிவகம், யாழ்ப்பாணம்) | திரு.இ.சர்வேஸ்வரா (உதவிப்பதிவாளர், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) |

★ நன்றியுரை:- திரு.ச.இராசநாயகம்
(உபதலைவர்,கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

குறிப்பு:-
01) குறித்த நேரத்தில் நிகழ்வினை ஆரம்பிப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பினையும் எதிர்பார்க்கின்றோம்.
02) நிகழ்வு நிறைவுபெற்றதும் கலாமன்றத்திலிருந்து யாழ்.பஸ் நிலையம் வரை பேருந்து வழிப்பாதை இல-782-விசேட போக்கு வரத்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர். நிர்வாக சபையினர், ஆசிரியர்கள்,மாணவர்கள்.
(அ-109)

இதயம் தூய்மையாக இருந்தால் வாழ்வில் எதைக் கண்டும் பயம் ஏற்படாது.

-ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கையில் எவரும் எங்கும் வாழலாம் ஆனால் சிங்களவர் மட்டுமே ஆளலாம்

இலங்கையின் எப்பாகத்திலும் எவரும் வாழலாம் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக்கருத்தின் பொழிப்பு இலங்கை என்ற நாட்டில் இன, மத, மொழி, ரீதியாக எவரும் பிராந்திய உரிமை கொண்டாட முடியாது. எவர் வேண்டுமானாலும் எங்கும் வாழலாம் என்பதாகும் இதனை மேலும் பகுத்து கூறுவதாயின் வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்க முடியாது. சிங்களவர்கள் விரும்பினால் வடக்கில் -யாழ்ப்பாணத்தில் வாழலாம். தமிழர்கள் விரும்பினால் தென்பகுதியில்-கொழும்பில் வசிக்கலாம் எனவே யாரும் இது எங்களுக்குரியது என்று உரிமை கொண்டாடவோ உரிமை கேட்கவோ முடியாது. கேட்கவும் கூடாது என்பதாக கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

இந்த நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு கூறியதில் எந்தத்தவறும் இல்லை. இப்படியான கருத்தை செவிமடுக்கும் உலக நாடுகள் கூட கோத்தா கூறுவது சரியென்றும் சொல்லலாம்.

இவை அவரவர் நிலைநின்று கூறப்படுவதாகும்.

ஆனால் ஒன்றைக் சொல்லும் போது அதில் தெளிவு இருக்க வேண்டும். அதேநேரம் இப்படியான கருத்துக்களைக் கூறி கருத்தால் ஒரு இனத்தை தோற்கடிக்க அல்லது மக்களின் மனங்களை புண்படுத்த எவரும் முற்படக் கூடாது.

அதிலும் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் இத்தகைய கருத்துக்களை கூறமுன் இவற்றை இதய சுத்தியுடன் தாம் கூறுகின்றோமா என ஒரு கணம் சிந்தித்தல் மிகவும் முக்கியமானதாகும்.

இலங்கையென்ற இந்த நாட்டில் எவரும் எங்கும் வாழலாம் என்ற கருத்தை கோத்தபாய இராஜபக்ஷ கூறுவதற்கு முன்னதாக, தென் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் காலத்திற்கு காலம் பட்ட அவலங்களை ஒரு கணம் திரும்பி பார்த்தால் நிலைமை புரியும்.

அது மட்டுமல்ல; தென்பகுதியில் தமிழ் மக்கள் வாழ்ந்த போதிலும். அவர்களின் சுதந்திரம் எவ்வாறு உள்ளது என்பதற்கு கடந்த ஜெனிவா தீர்மான நிகழ்வு நல்லதோர் எடுத்துக்காட்டு. ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேறினால் என்ன நடக்குமோ என்ற ஏக்கத்துடனே தென்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் இருந்தனர்.

அன்றைய நாள் முழுவதும் வீட்டிற்குள் இருக்க வேண்டிய சூழ்நிலை.

தவிர, இலங்கையின் எப்பாகத்திலும் எவரும் வாழலாம் என்று கூறுவோர் விரிந்த-பரந்த பேரினவாத சிந்தனையற்ற மன நிலை உடையவர்களாக இருந்தால்,

இலங்கையில் எவரும் எங்கும் வாழலாம்; எந்த இனமும் இந்த நாட்டை ஆளலாம் என்றல்லவா கூறியிருக்க வேண்டும். இதைக் கூறாத வரை-அதற்கான சூழமைவை உருவாக்காத வரை எவரும் எங்கும் வாழலாம் என்பது தப்பித்துக்கொள்வதற்கான கூற்றே அன்றி வேறில்லை.

# மத நல்லிணக்கம் பேசியதற்காகவா காதரின்மீது கொலைவெறித் தாக்குதல்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி கேள்வி

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மீது அவதூறு கற்பித்த அமைச்சரின் செயலுக்கு வருந்தி கத்தோலிக்க மக்கள் மேற்கொண்ட பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் ஊடகவியலாளர் எம்.ஏ.காதர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக்கண்டித்து வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அறிக்கைவெளியிட்டுள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

நலிவடைந்த மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றுவதே இறைவனுக்குச் செய்கின்ற அளப்பரிய பணி என்று திடசங்கற்பம் பூண்டு சமூக அக்கறையுடன் மனிதாபிமானத்துடன் பணியாற்றி வருகின்ற அவரை தென்பகுதிப் பெரும்பான்மையினத்தின் மத தீவிர வாதிகளுடன் ஒப்பிட்டு அவரைச் சாடி யிருப்பது வன்னித் தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்று அமைச்சராகியிருக்கின்ற றிஷாத்திற்கு அழகல்ல.

அமைச்சர் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். மன்னார் ஆயர் ஒருபோதும் மக்களை மதரீதியாக் பிரித்துப்பார்த்தது கிடையாது. இது அமைச்சருக்கும் தெரியும். ஒருபோதும் அவர் அடுத்தவரின் சொத்தை அபகரிக்கவோ அல்லது வேற்றுமதத்தவர்களை நிந்திக்கவோ இல்லை என்பதும் அமைச்சருக்குத் தெரியும்.

ஆயர் எந்தநேரத்திலும் அடாத்தாக அடுத்தவர்களின் காணியைப்பிடித்து அங்கிருப்பவர்களை எழுப்பி தனது வாக்கு வங்கியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தனது மதத்தைச் சார்ந்தவர்களை அவர்கள் விரும்பாத போதும் வலுவில் குடியமர்த்தவில்லை.

மாறாக தேவாலயத்திற்குச் சொந்தமான காணிகளில் ஏழை மக்களுக்கு வீடுகட்டிக்கொடுத்துள்ளதுடன் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு தமது குடும்ப வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் வழிசெய்துள்ளார். இதில் எதை அமைச்சர் செய்துள்ளார் என்பதை மக்கள் நன்கறிவர் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# சப்பறத் திருவிழா

காரைநகர் பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலய சப்பறத்திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை 6.30 மணிக்கு யாழ்.பட்டிமன்றக்குழுவினர் வழங்கும் பண்டிதர் பொன்.சுகந்தனின் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. (அ-9)

# நியாயமான விலை, தரமான பசளை வழங்கப்பட வேண்டும்

## தோட்ட உரிமையாளர்கள் வலியுறுத்து

தமக்கு நியாயமான விலை, மானியங்கள் மற்றும் தரமான பசளை என்ப வற்றை அரசாங்கம் வழங்காது விடின், தேயிலை பயிரிடுவதை கைவிடப் போவதாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

அரசாங்க உதவிகள் போதாமல் இருப்பதானால் தேயிலை கைத்தொழில் அழிந்து வருவதாக தேசிய சிறு தேயிலை தோட்ட உரிமையாளர் சம்மேளனம் கூறியது. சிறு தோட்ட தேயிலை உற்பத்தி ஆண்டுதோறும் 150 பில்லியன் ரூபா வறுமானத்தை ஈட்டிக் கொடுக்கின்றது. இவற்றில் 3 மில்லியன் மக்கள் வேலை செய்கின்றனர். நாட்டின்தேயிலை உற்பத்தியில் 76 சதவீத சிறு தோட்டங்களில் விளைகின்றது.மகிந்த சிந்தனை பசனள் எனக் கூறப்படும் தரக்குறைவான பசளை கொண்ட பக்கெற்றுகளை அரசாங்கம் இப்போது விநியோகித்து வருகிறது. தேயிலை கைத் தொழில் நிலைத்திருப்பதற்கு சிறந்த தரத்திலான பசளை தேவை என சம்மேளனத்தின் ஏற்பட்டாளர் லால் பிரேம்நாத் கூறியுள்ளார். தரமான பசளைகள் இடப்படும் போது தேயிலை செடிகள் 5 நாட்களில் வளர்ந்து விடும். ஆனால் தற்போதைய சிந்தனைப் பசளையானது தேயிலை செடிகளை ஒரு இரவிலேயே பட்டுப்போகச் செய்கின்றன. இதனால் நாம் புதிதாக தேயிலைச் செடிகளை வளர்த்து எடுக்க வேண்டியுள்ளது என அவர் கூறியுள்ளார். (அ-2)

# வைகாசி பொங்கல் திருவிழா ஆரம்பம்

வரலாற்றுப் புகழ்மிக்க வன்னி வற்றாப்பளை அம்மன் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பொங்கல் வைபவத்துடன் நிறைவடையவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகைதந்து காவடி, பொங்கல் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யவுள்ளனர். இவ்விழாவிற்குரிய பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து உட்பட அனைத்த ஒழுங்கமைப்புக்களும் துணுக்காய் பாண் டியன்குளம் பிரதேச செயலர் சி. குணபாலன் தலைமையில் ஆலய பரிபாலன சபையினரால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. (அ-3,15)




# வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

வழிபாடு இந்த உலகில் மட்டும் நடைபெறவில்லை. விண்ணுலகிலும் நடைபெறுவதை மணிவாசகர் தனது பாடலிலே குறிப்பிட்டுள்ளார். முன்னோர் பற்றிய வழிபாடு வணங்கும் நிலையையும் உள்ளடக்கியது. வணங்குதல் என்பது- உடல் நிலையாகச் செய்யப்படுவது. வணக்கம் என்ற சொல் இச் செயற்பாட்டுடன் தொடர்புடையது. உடலை வளைத்துத் தாழ்ந்து நிற்பதே வணங்குதலாகும். நமக்கு முன்னே நிற்பவரை உயர்ந்தவராகக் கருதி எம்முடலை வளைத்து வணங்குவது ஓர் உயர்ந்த பண்பட்ட செயலாகும். ஜப்பானியர் தமது நாளாந்த நடைமுறையில் இவ்வணக்க முறையைப் பின்பற்றுகின்றனர்.


பார்வதியைப் பக்கலிலே கொண்டிருக்கும் பரமேஸ்வரன் உலக முழுமுதற் கடவுள். வெவ்வேறு பெயர்களுடன் வெவ்வேறிடங்களில் வணங்கப்படுகின்றார். மணிவாசகர் சிவனை வணங்க விரும்புகிறார். பெண்ணை ஒரு பாகமாகக் கொண்ட இறைவன் திருக்கோலமே அவர் நினைவுக்கு வருகிறது. அதனால் இணங்கு கொங்கை மங்கை பங்க என விளிக்கிறார். அன்னையோடு இருப்பதால் இறையருள் கிடைக்கும் என உறுதியாக நம்புகிறார். ஞானசம்பந்தர் கண்ட திருக்கோலத்தையே வணங்க எண்ணுகிறார். இறைவனோடு நேரில் கண்டு பேசுவது போலப் பாடலை அமைத்துள்ளார். நின்னை ஒத்த பிறிதொரு உண்மைப்பொருள் வேறொன்றும் இல்லை. அதனால் மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் நின் னையே வணங்குகின்றனர். வேதங்கள் நான் கும் நின்னை அடைவதற்காக ஓல மிட்டு வாடி நிற்கும் என இறைவனுடைய தனித்துவமான சிறப்பை முதலிலே பேசுகிறார். வேதங்கள் இறைவனுடைய பெருமையைப் பேச முடியாமல் எல்லையறிய முடியாமல் இருக்கின்றன என்பதே அவருடைய முடிபாகும்.

இத்தகைய அருமையுடைய இறைவனை அடிமையாகிய நாங்கள் வணங்கி விடமாட்டோம் என்ற பெருமகிழ்ச்சியோடு கூறுகின்றோம். இவ்வேளையிலே வெளிப்பட்டு வந்துநின்று எமக்கு அருள் செய்வதற்கு தடையாகத் திருவுள்ளத்திலே கருதுவது எதுவோ எனக்கேட்கிறார். மணிவாசகரது பக்தியுணர்வு நிலைப்பாடலிலே தெளிவாகப் புலப்படுகிறது. இறைவனிடம் அவர் கேட்கின்ற கேள்வியும் இதனை நன்கு உணர்த்துகிறது. ஒருவர் தன்னைத் தாழ்த்தி நின்று செயற்பட்டால் இறைவனை நேரிற் காணும் மனப்பக்குவத்தைப் பெறலாம். இறையுணர்வு எப்போதும் எம்மிடம் இருக்க வேண்டும். கோயிலுக்குச் சென்று வணங்கும் போது இறைவனிடம் மனந்திறந்து பேசும் பயிற்சியை நாம் பெறலாம் என்பதையே மணிவாசகரது பாடல் உணர்த்துகிறது. மனிதரிடம் எல்லா விடயங்களையும் பேசமுடியாத நிலை ஏற்படலாம். ஆனால் இறைவனிடம் எல்லாவற்றையும் பேச முடியும். துன்பங்களையெல்லாம் தாங்கும் மனப்பக்குவத்தை இதன் மூலம் பெறமுடியும். அடைக்கலமாக இறைவனை நினைந்து வாழும் வாழ்க்கையே நிம்மதியைத்தரும். இறைவனை மீண்டும் காண வேண்டும் என்ற விருப்போடு மணிவாசகர் காத்திருக்கிறார். இத்தகைய காத்திருப்பு மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. பாடலில்மணிவாசகர்இறைவனைநின்னை என விளித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. மிக நெருக்கமான உறவையே நின்னை என விளிப்பது நடைமுறையாக உள்ளது. இறையடியவர் என்ற நெருக்கமான உறவு நிலையே இதற்குக் காரணமாக உள்ளது. மணி வாசகர் காட்டும் இறை யன்பு எல்லோருக்கும் ஏற்றதாகும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வணங்கும் நின்னை மண்ணும் விண்
ணும் வேத நான்கும் ஓல மிட்டு
உணங்கும் நின்னை யெய்தலுற்று
மற்றொருண்மையின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன
வந்து நின்றருளுதற்கு இணங்கு
கொங்கை மங்கை பங்க என்கொலோ
நினைப்பதே

## ராஜ்யசபா உறுப்பினராக பதவியேற்கவுள்ள சச்சின்



(டில்லி)

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் எதிர்வரும் 4 ஆம் திகதி ராஜ்யசபா உறுப்பினராக பதவியேற்க உள்ளார். கிரிக்கெட்டில் அளப்பரிய சாதனைகள் பல செய்தமைக்காக சச்சின் டெண்டுல்கர் ஏப்ரல் மாதம் ராஜ்யசபா உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் அவர் ஜூன் 4 ஆம் திகதி பதவியேற்றுக்கொள்வார் என்று மாநிலங்களவை விவகாரங்கள் துறை இணை அமைச்சர் ராஜிவ சுக்லா தெரிவித்துள்ளார்.

சச்சினுக்கு மாநிலங்களவைத் தலைவர் ஹமீத் அன்சாரி பதவிப் பிரமாணம் செய்து வைக்கவுள்ளார். (அ-2)

## உலை எண்ணெய், டீசல் மற்றும் பெற்றோலை இந்தியாவிடம் பெற்றுக்கொள்ள பாக். ஆர்வம்

(இஸ்லாமாபாத்)

உலை எண்ணெய், டீசல், பெற்றோல் ஆகியவற்றை இந்தியா விடமிருந்து வாங்க பாகிஸ்தான் ஆர்வமாக இருப்பதாக அந்நாட்டு அதிகாரியொருவர் இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் தெரிவித் துள்ளார்.

டீசலை கராச்சி துறைமுகம் வழியாகவும் உலை எண்ணெய், பெற்றோலை வாகா நில எல்லை வழியாகவும் வாங்க விரும்புவதாகக் குறிப்பிட்டார். ஜூலைமாத முற்பகுதியில் இருநாட்டுப் பிரதிநிதிகளும் புதுடில்லியில் சந்தித்துப் பேசி விலை, அளவு ஆகியவற்றை முடிவு செய்வார்கள் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவிடமிருந்து இவற்றை வாங்க எந்தவிதமான அடித்தளக் கட்டமைப்பு தேவைப்படும் என்று தகவல் தருமாறு வர்த்தக அமைச்சகத்திடம் கோரியிருப்பதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

வாகா எல்லைப் பகுதி வழியாக பெற்றோலியப் பண்டங்களை அளிப்பதற்கு வசதியாக பைப் லைன்களை அமைக்கத்தயாராக இருப்பதாக இந்தியத்தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

இந்தியக்குழுவினர் பாகிஸ்தான் நாட்டின் பெற்றோலியத்துறை அமைச்சர் ஆசிம் உசைனையும் அது தொடர்பாக சந்தித்துப் பேசியுள்ளனர்.

ஆனால் தி எக்ஸ்பிரஸ் டிரிப்யூன் என்ற பாகிஸ்தான் பத்திரிகையோ இந்தியாவிடமிருந்து பெற்றோலியப் பண்டங்களை வாங்குவது பாகிஸ்தானின் இராணுவ நோக்கத்துக்கு ஆபத்தாக முடியும் என அச்சம் அதிகாரிகளிடையே நிலவுவதாகக் கூறுகிறது.

இந்தியாவிடமிருந்து உயர்வேக டீசலையும் விமான எரிபொருளையும் பாகிஸ்தான் வாங்கத் தொடங்கினால் திடீரென்று இந்தியா இவற்றின் விநியோகங்களை நிறுத்திவிட்டால் பாகிஸ்தானுக்கு பெரிய நெருக்கடி ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் நிலவுவதாகவும் எனவே இந்தியாவிடமிருந்து வாங்காமல் வளைகுடா நாடுகளிடமிருந்து வாங்குவதே நல்லது என்ற எண்ணம் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் நிலவுவதாகவும் அந்தச் செய்தி தெரிவிக்கிறது. (அ-2)

## கவியரசு கண்ணதாசனின் மனைவி இறைபதமடைந்தார்

(டில்லி)



மறைந்த கவியரசு கண்ணதாசனின் மனைவி பொன்னம்மாள் ஆச்சி (வயது-79) கடந்த சில தினங்களாக உடல் நலிவுற்றிருந்தார். இவர் நேற்று முன்தினம் காலை 11 மணயளவில் திடீர் மரணம் அடைந் தார்.

இவருக்கு கண்மணி, சுப்பு, கலைவாணன் கண்ணதாசன், கண்ணதாசன் ராமசாமி, வெங்கடாசலம் என்ற நான்கு மகன்களும் அலமேலு சொக்கலிங்கம், தேன்மொழி காத்தப்பன், விசாலாட்சி பழனியப்பன் ஆகிய 3 மகள்களும் உள்ளனர்.

இதில் கலைவாணன் கண்ணதாசன் ஏற்கனவே காலமாகிவிட்டார். இவரின் உடல் தகனம் இன்று பேரூரில் உள்ள மின் மயானத்தில் இடம் பெறும். ஏராளமான திரையுலகினர் அவரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சதாம்ஹுசைன் கைபட எழுதிய வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக வெளியிடத்திட்டம்

மறைந்த ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தன் கைப்பட எழுதியவற்றை வாழ்க்கை வரலாறு புத்தகமாக வெளியிட அவரது மகள் ரகத் சதாம் ஹுசைன் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தகவலை டுபாய் நாட்டில் இருந்து வெளியாகும் அல் அரேபிய தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

ஈராக் நாட்டில் அரை நூற்றாண்டுகாலம் சர்வாதிகாரியாக திகழ்ந்தவர் சதாம் ஹுசைன். அமெரிக்காவிற்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய சதாம் 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தூக்கிலிடப்பட்டார்.

தனது நினைவுகள் அனைத்தையும் கைப்பட எழுதிய டைரி ஒன்றில் அவர் குறித்து வைத்துள்ளார். கவிதைகள், கடிதங்கள் போன்றவற்றையும் அவர் எழுதியுள்ளார்.

இந்த எழுத்துக்களை அவரது மூத்த மகள் ரகத் புத்தகமாக வெளியிட திட்டமிட்டுள்ளார். தற்போது ஜோர்தானில் வசித்து வரும் அவர் என் தந்தை எழுதியுள்ளவை அனைத்தும் உண்மையான நினைவுகள் என்று கூறியுள்ளார். அவரது நினைவுகளை உலகறியச் செய்வது மகளாகிய எனது கடமை என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைன் ஏற்கனவே நான்கு நாவல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பின்லேடனைக் காட்டிக்கொடுத்த டாக்டரை கொலை செய்ய சதித்திட்டம்

### உளவுத்துறைக்கு எச்சரிக்கை

அல்கொய்தா இயக்க தலைவர் ஒசாமா பின்லேடனை கடந்த ஆண்டு மே மாதம் அமெரிக்க அதிரடி படையினர் சுட்டுக்கொன்றனர். அங்கு பின்லேடன் தங்கி இருந்த தகவல் பாகிஸ்தானை சேர்ந்த டாக்டர் சஷில் அரடி மூலம் தான் அமெரிக்காவுக்கு தெரியவந்தது. எனவே அவரை அமெரிக்கா வெகுவாக பாராட்டி கருணை காட்டி விடுதலை செய்ய பாகிஸ்தானை கேட்டுக்கொண்டது. ஆனால் பாகிஸ்தான் நீதிமன்றில் அரடி மீது தேசதுரோக வழக்கு தொடரப்பட்டு 33 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து நீதிபதிகள் தீர்ப்புக்கூறினர். அவர் பெஷாவர் சிறைக்காவலில் இருக்கிறார்.

இந்நிலையில் பாகிஸ்தான் உளவுத்துறையின் சார்பில் உள்துறைக்கு ஒரு எச்சரிக்கை தகவல் கொடுத்துள்ளனர். அதில் சிறையில் இருக்கும் டாக்டர் அரடியின் உயிருக்கு தீவிரவாதிகளால் ஆபத்து இருக்கின்றது. தீவிரவாதிகள் அவரை கடத்திச் செல்ல முயற்சி செய்யலாம் அல்லது விஷம் வைத்து கொலை செய்யலாம் என கூறப்பட்டுஇருக்கின்றது. எனவே சிறைச்சாலைக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடு செய்வதா? அவரை சிறைக்கு மாற்றலாமா என்பது குறித்து அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றார்கள். (அ-2)

## நைஜீரியாவில் கலவரம் வீடுகளுக்குதீ வைப்பு;45 பேர் பலி


நைஜீரியா நாட்டில் தென்கிழக்குப் பகுதியில் இருக்கும் கிராமத்தில் இருதரப்பினர் இடையே திடீர்மோதல் ஏற்பட்டது. அதில் அங்குள்ள வீடுகள், கிறிஸ்தவ ஆலயம் போன்றவை தீ வைத்து எரிக்கப்பட்டன.

கத்தி, பயங்கர ஆயுதங்களால் ஒருவரை ஒருவர் தாக்கினர். இந்த மோதல் கலவரத்தில் கிராம தலைவர், 4 பொலிஸார் மற்றும் பெண்கள் , குழந்தைகள் உட்பட 45பேர் பலியானார்கள்.

வீடுகளை இழந்த சுமார் 2ஆயிரம் பேர் அயற்கிராமங்களுக்கு ஓடித்தஞ்சம் அடைந்துள்ளனர். கலவரத்தை ஒடுக்க அங்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (அ-2)

## ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணையை எதிர்கொள்ள தயாரா?

### பிரதமருக்கு சவால் விடுக்கும் ஹசாரே





ஊழல் குற்றச்சாட்டுக்களை விட்டும் தூய்மையானவர் என நிரூபிக்க விசாரணையை எதிர்கொள்ளத்தயாரா? என்று பிரதமருக்கு அன்னா ஹசாரே சவால் விடுத்துள்ளார்.

பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் அவருடைய மந்திரி சபையில் உள்ள 14பேர் மீது அன்னா ஹசாரே குழுவினர் ஊழல் புகார் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தன்மீது ஹசாரே குழுவினர் கூறும் குற்றச்சாட்டுக்களில் ஏதேனும் நிரூபிக்கப்பட்டுவிட்டால் நான் என்னுடைய பொது வாழ்க்கையை விட்டு விலகத் தயார் என்று அறிவித்துள்ளார்.

இந்நிலையில் பிரதமர் பதிலை வரவேற்றுள்ள அன்னா ஹசாரே பிரதமர் நேர்மையானவர் என்றால் அவர் விசாரணையை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். அவரை நானும் ஒரு நேர்மையானவராகவே பார்க்கிறேன். பிரதமர் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் தரம்பற்றி ஆய்வு செய்வதற்கு எனக்கு இன்னும் அதிகநேரம் தேவைப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் பிரதமருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மீது முன்னாள் நீதிபதி ஒருவருடைய தலைமையில் விசாரணை நடத்தவேண்டும் என்றும் அன்னாஹசாரே கூறியுள்ளார். (அ-2)

## மனித இரத்தத்தில் எரியும் விளக்கை அமெரிக்கர் வடிவமைத்து சாதனை



மனிதர்களின் இரத்தத்தில் எரியும் விளக்கை அமெரிக்க வடிவமைப்பாளர் மைக் தாம்ப்சன் என்பவர் வடிவமைத்துள் ளார். அமெரிக்காவைச் சேர்ந்த மைக் தாம்ப்சன் என்பவர் சற்று வித்தியாசமாக மனித இரத்தத்தில் எரியும் விளக்கை வடிவமைத்துள்ளார்.

அந்த விளக்கினுள் இரசாயனங்களை வைத்துள்ளார். அந்த கண்ணாடி விளக்கை எரிய வைக்க அதன் வாய்ப்பகுதியை உடைத்து அந்த துண்டைக்கொண்டு கையைக் கீறி இரத்தத்தை அந்த இர சாயனங்களில் விட வேண்டும். இரத்தம் இரசாயனங்களுடன் கலந்த பின் விள்க்கு நீல நிறத்தில் பிரகாசிக்கின்றது. இந்த விளக்கை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த முடியும். மக்கள் மின்சாரத்தின் அருமை தெரி யாமல் கண்டபடி வீணடிப்பதை உணர்த்தவே இந்த விளக்கை வடிவமைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மனித உடலில் இருந்து இரத்தம் அதிகளவில் வெளியேறினால் அது இப்படி உயிருக்கு ஆபத்தோ, அதே போன்று தான் மின் சக்தியை அதிகம் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு ஆபத்து என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் தனது இணையத்தளத்தில் மேலும் கூறுகையில், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் வகையில் இந்த விளக்கு இருப்பது, விளக்கு எப்பொழுது தேவையோ அப்பொழுது மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று மக்களை சிந்திக்க வைக்கும் என குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வவுனியாவில் சர்வதேச மெய்வல்லுனர் தின கொண்டாட்ட நிகழ்வுகள்

17 ஆவது சர்வதேச மெய்வல்லுனர் தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் கடந்த செவ்வாய் கிழமை வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.


சர்வதேச மெய்வல்லுனர் சம்மேளத் தினதும் இலங்கை மெய்வல் லுனர் சங்கத்தின் ஏற்பாட்டுடன் இந் நிகழ்வுகள் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன. பெரும்பாலும் தென்பகுதிகளி லேயே நடைபெறுகின்ற இந் நிகழ்வுகள் இம் முறை வடபகுதியின் வவுனியா மாவட்டத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வு வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அதிபர் ரி.அமிர்தலிங்கம் தலைமையில் ஆரம்பமானதுடன், இவ்வாரம்ப நிகழ்வினை வன்னிப் பிராந்திய இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் சண்முகராஜா பிரேம்குமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றியதுடன், 17-வது சர்வதேச மெய்வல்லுனர் தினக் கொண்டாட்ட நிகழ்வுகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து 16 வயதின் கீழ், 18 வயதின் கீழ் என இரு பிரிவுகளாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையிலான கீழ்வரும் மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெற்றதுடன் வெற்றி பெற்றவர்களிற்கு சர்வதேச மெய்வல்லுனர் சம்மேளனத்தின் சான்றிதழ்களும், ரீசேட் மற்றும் IAAF நினைவுகைப் பட்டிகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்ததும் இங்கு சிறப்பான விடயமாகும்.

மேலும் மாலை 2.30 மணிக்கு நடைபெற்ற இறுதி நிகழ்வுகளின் பிரதம விருந்தினராக கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி கே.பேனாட் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீர, வீராங்கனைககளுக்கு பரிசில்களையும் வழங்கி கௌரவித்தார்.



# 15ஆவது ஆசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகள்-2012



15-வது ஆசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான குண்டெறிதல் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியைச் சேர்ந்த இரத்தின சிங்கம் நிமலேந்திரா தெரிவாகியுள்ளார்.

இவர் இப் போட்டிகளிற்காக சென்ற வருடம் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளிற்கிடையிலான தேசிய மட்ட போட்டிகளிலே 19 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான குண்டெறிதல் போட்டியிலே 12.78 மீற்றர் எறிந்ததன் மூலம் நவம்பர் மாதத்தில் 15-வது ஆசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகளிற்கான இலங்கை தேசிய மெய்வல்லுனர் குழாமில் சென்ற வருடம் முதன் முதலாக இணைக்கப்பட்டிருந்தார்.

எனினும் 2012 ஆம் ஆண்டு கடந்த மாதம் நடைபெற்ற இலங்கை கனிஷ்ட மட்ட மெய்வல்லுனர் போட்டிகளிலே 20 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான குண்டெறிதல் போட்டியிலே 14.09 மீற்றர் தூரம் எறிந்து சிறப்பான பெறுதியுடன் 15-வது ஆசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகளிற்கான இலங்கை தேசிய மெய்வல்லுனர் குழாமில் இவர் தன்னை உறுதி செய்து கொண்டார்.

கடந்த மாதம் 2010 ஆம் ஆண்டு முதல் தனது பாடசாலை உடற்கல்வித்துறை ஆசான் கே.பாக்கியநாதன் மூலமாக வவுனியா மாவட்ட மெய்வல்லுனர் பயிற்றுனர் கே.விஜிதரனிடம் அறிமுகமாகி அவர்களிடமே மெய்வல்லுனர் பயிற்சிகளை பெற்று வருகின்றார்.

இது குறித்து தமேந்திரா கூறுகையில்,

குறிப்பாக குண்டெறிதல் மற்றும் தட்டெறிதல் ஆகிய பயிற்சிகளை வவுனியா நகரசபை மைதானத்திலும், யாழ். துரையப்பா மைதானத்திலும். எனது உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி மைதானத்திலும் பயிற்றுனர் விஜிதரனிடம் பெற்றுவருகிறேன். அதைவிட ஆசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகளிற்கான இலங்கை தேசிய மெவல்லுனர் குழாமில் நான் இணைத்துக் கொள்ளப்பட்டது முதல் (கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல்) தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கிலும் தனது வேலைப்பளுவின் மத்தியிலும் என்னுடன் வந்து தங்கியிருந்து எனக்கு பயிற்சிகளை சிறப்பாக வழங்கி என்னை இந்த சர்வதே மட்ட போட்டிகளிற்காக தயார் செய்துள்ளார் என்றார்.

# இலங்கை...

ஜனாதிபதியையும் செப்ரெம்பர் மாதம் பங்களாதேஷ் ஜனாதிபதியையும் அவர்களுடைய நாட்டிற்குச் சென்று மன்மோகன் சிங் சந்தித்துள்ளார்.

இதேவேளை இந்திய பிரதமரை கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் புதுடில்லியில் வைத்து நேபாள பிரதமர் மற்றும் பூட்டான் மன்னர், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.


ஆனால் இலங்கை ஜனாதிபதியை மாலைதீவில் நடந்த சார்க் உச்சி மாநாட்டின் போது ஒரு முறையும் ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க சென்றிருந்த போது ஒரு முறையும் இந்திய பிரதமர் சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்புக்கள் அவசர சந்திப்புக்களாகவும் மிகவும் குறுகிய சந்திப்பாகவுமே அமைந்திருந்தன.

இந்த சந்திப்பின் போது எந்த விவகாரம் குறித்தம் பேசப்படவில்லை என்பது இங்கு முக்கியமானது.

மேலும் 2008ஆம் ஆண்டு பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். ஆனால் அதுவும் இருதரப்பு சந்திப்புக்கான பயணம் அல்ல. சார்க் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற் காகவே அவர் அங்கு சென்றிருந்தார்.

பின்பு கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்தார். போர் முடிபிற்கு கொண்டுவரப்பட்ட பின்பு இடம்பெற்ற இறுதியான இருதரப்பு பேச்சுவார்த்தை இதுவே. (ந-6)



இலங்கை தடகளப் பயிற்சி சம்மேளன பிரமுகர்கள் நேற்று சென்.ஜோன்ஸ் கல்லூரியில் வைத்து யாழ்.உதைப்பந்தாட்ட லீக் உறுப்பினர்களுடன் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அதன் போது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.

# இருபது-20 ; இலங்கை-பாக். இன்று மோதல்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 இருபது -20 போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

இதில் முதலில் இருபது -20 போட்டிகளும் பின்னர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளும் இறுதியில் டெஸ்ட் தொடரும் இடம்பெறவுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடை யிலான முதலாவது இருபது-20 போட்டி இன்று அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வ தேசக் கிரிக்கெட் மைதானத்தில் இரவு 7.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

மற்றைய இருபது-20 போட்டியும் நாளை மறுதினம் இரவு 7.00 மணிக்கு அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்திலேயே இடம்பெறவுள்ளது.

இதேவேளை, ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் 7ஆம், 9ஆம், 13ஆம், 16ஆம்,18ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இதில் முதலிரண்டு போட்டிகளும் பல்லேகல சர்வதேச விளையாட்டு மைதானத்திலும் அடுத்த மூன்று போட்டிகளும் ஆர். பிரேமதாச மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

டெஸ்ட் தொடரில் முதல் போட்டி யூன் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை காலி சர்வதேச மைதானத்திலும், இரண்டாவது போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் யூன் 30ஆம் திகதி முதல் யூலை 4ஆம் திகதி வரையும், மூன்றாவது போட்டி யூலை 8ஆம் திகதி முதல் யூலை 12 ஆம் திகதி வரை பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆளுநர் அலுவலக திறப்புவிழாவுக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அலுவலகத்தை திறந்து வைப்பதையும் படத்தில் காணலாம். (படம் : N.குமார்)

## சமகால நிலைமையை...

நான் வந்துள்ளேன்.

எனது இந்த விஜயத்தின் போது இலங்கையின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட அமைச்சர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளேன்.

நான் முதன் முறையாக யாழ்ப்பாணம் வந்துள்ளேன். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பாதிக்கப்பட்ட பிரதேசம் இது. இருப்பினும் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டு வருகிறது.

இந்த நாட்டில் இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளது.

அர்சாங்கத்தின் முக்கிய குறிக்கோள் நாட்டுப் பணியே, வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் எந்தப் பிரதேசத்திற்குச் சென்று பார்வையிட்டாலும் அந்தப் பிரதேசத்தில் அபிவிருத்தி பணிகளையும், புனரமைப்பு பணிகளையும் நேரடியாகச் செய்ய முடியாது. அந்த நாட்டின் அரசின் ஊடாகவே செய்ய முடியும்.

எனவே உங்களுடைய தேவைகளை எனது நாட்டின் அரசாங்கத்திடம் எடுத்துக் கூறி உதவிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றைய விஜயத்தின் போது நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று விசேட வழிபாட்டில் ஈடுபட்டார். பின்பு யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் அங்கு சிங்கப்பூர் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சிறுவர் பகுதியையும் பார்வையிட்டார்.

பின்பு அங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோருடன் கலந்துரையாடினார்.

யாழ்.மாநகர சபைக்கு விஜயத்தை மேற்கொண்ட பின்பு யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை சந்தித்து கலந்துரையாடியதோடு வட மாகாண ஆளுநரை அவரது அலுவலகத்திலும் சந்தித்துக் கலந்துரையாடினார். (ந-6)


கடை திறப்பு விழா

ஐங்கரா மோட்டோஸ்



உழவு இயந்திர உதிரிப்பாக விற்பனை நிலையம்

இல. 05, கனகபுரம் வீதி, கிளிநொச்சி

(கிளிநொச்சி பஸ் நிலையம் அருகாமையில்)

எனும் முகவரியில் இன்று 01.06.2012 வெள்ளிக்கிழமை

சுபநேரம் 12.01 மணியளவில்

ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனைத்து

வாடிக்கையாளர்களையும் நண்பர்களையும்

அன்புடன் அழைக்கின்றோம்.

(C-115)

உரிமையாளர் - 0776224082


## இலங்கைக்கு சர்வதேசத்தின்...

கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 30 ஆண்டு காலமாக நிலவிவந்த தீவிரவாதத்தை ஒழித்து நிலையான சமாதானத்தை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் நாட்டில் முன்னேற்றங்களை காண்பதற்கான வழிமுறைகளை அரசாங்கம் பல்வேறு துறைகளிலும் மேற்கொண்டு வருகின்றது. சர்வதேச நாடுகள் கூறுவது போன்று எம்மால் அவசரமான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது.

வடக்கு-கிழக்கில் அமைந்துள்ள படை முகாம்களை அகற்ற வேண்டும் என பிரித்தானியா போன்ற நாடுகள் கூறிவருகின் றன. எந்தவொரு சர்வதேச நாட்டினதும் அழுத்தங்களையோ, ஆலோசனைகளையோ அரசாங்கம் விரும்பவில்லை.

எனவே இலங்கையின் உள்ளார்ந்த விடயங்களில் தலையிடும் நிலைப்பாட்டை பிரித்தானியா மாற்றிக் கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரின்போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 8,000 பேர் வரையிலானோரை புனர்வாழ்வு அளித்து அரசாங்கம் விடுவித்துள்ளது.

இதுகுறித்தும் சர்வதேச நாடுகள் தலையீடுகளை மேற்கொள்கின்றன. நாட்டின் நீதிமன்ற பொறிமுறையின் அடிப்படையில் இடம்பெற வேண்டிய விவகாரங்களில் பிறிதொரு நாடு தலையிடுவது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அந்நிய நாடுகள் கூறுவதைத்தான் செய்ய வேண்டும் என்றால் அரசியலமைப்போ, சட்டங்களோ தேவையில்லை. நாட்டின் தேசிய கொள்கைகளில் அரசாங்கம் உறுதியுடனேயே இருக்கின்றது. ஜனநாயக நடவடிக்கைகளை உள்நாட்டில் முன்னெடுக்க பிறிதொருவரின் ஆலோசனை எமக்குத் தேவையில்லை. நாட்டுக்குள் எந்வொரு சர்வதேச நாட்டவர்களும் வரலாம். அதற்கு எவ்விதமான தடைகளும் கிடையாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இந்திய மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான சர்வ கட்சி நாடாளுமன்றக் குழுவினர் இங்கு வந்து சென்றனர். இக்குழுவினர் உள்நாட்டின் முன்னேற்றங்களை வெளிப்படையாகவே பாராட்டி விட்டுச் சென்றனர்.

அதேபோன்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இங்கு வந்து விட்டுச் செல்லாம். ஆனால் இலங்கை தொடர்பில் நவநீதம்பிள்ளை பாரபட்சமாகவே நடந்து கொள்கின்றார். எனவே இவரின் வருகை நாட்டிற்கு எதிராக காணப்படுமாயின் அதனை அரசாங்கம் அனுமதிக்காது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8;11)

## வரலாற்றை சரியாக...

ஆதாரபூர்வமான சான்றுகளுடன் பதிலளிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லாவெல மேதானந்த தேரர் முதலில் வராலாற்றைப் படிக்க வேண்டும். அவருக்கு இலங்கையின் வரலாறு தொடர்பாக முழுமையான அறிவு கிடையாது. வடக்கு-கிழக்குப் பகுதியானது தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடம். இதனை காலத்திற்கு காலம் எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. இதனை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

இந்நிலையில், எல்லாவெல மேதானந்த தேரரின் கருத்துக்கு பதிலளிக்க வேண்டிய கடமைப்பாடு வரலாற்று ஆசிரியர்களுக்கு உள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பாக விரைந்து வரலாற்று ஆசிரியர்கள் பதிலளிக்க வேண்டும்.

கே.எம்.டி.சில்வா என்னும் சிங்கள வரலாற்று ஆசிரியர் இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதி தமிழர் செறிந்து வாழும் பகுதி என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் ஆரம்பகால அ... மைப்புச் சீர்திருத்த சட்ட மூலங்களின் ஆ... ரங்களில் கூட தமிழர்களின் பாரம்பரிய பூமியாக வடக்கு-கிழக்கு பகுதி என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை எல்லாம் அறியாத எல்லாவெல மேதானந்த தேரர், இவ்வாறான கருத்துக்களை கூறி மகிந்த அரசின் துணையுடன் வடக்கு கிழக்கில் பௌத்த ஆதிக்கத்தை நிலைநிறுத்தி தமிழ் மக்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் உரிமையை நிராகரிக்கும் வகையில் வட பகுதி தமிழர்களுக்கு மட்டுமே சொந்தமானது அல்ல என படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.சிக்கு வழங்கிய செவ்விக்கு பாராட்டுத் தெரிவித்த எல்லாவெல மேதானந்த தேரர், ...கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்று ...மை கோருவதற்கு எவ்வித சான்றுகளோ அல்லது ஆதாரங்களோ கிடையாது எனக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இது தொடர்பில் சிறிதரன் எம்பியும் தனது கண்டனத்தை வெளியிட்டிருக்கிறார். (ந-8-11)

## இலங்கைக்கு எதிராக...

வழியை திரிபுபடுத்தும் சமூகம் இருக்கின்றது.

நாட்டுக்கு எதிராக 8 இணையத்தளங்கள் செயற்படுகின்றன. அவற்றை நடத்தி வருபவர் ஒருவரே. அந்த இணையத்தளங்களில் நாட்டுக்கு எதிராக சேறுபூசும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வெளிநாட்டவர்கள் இந்த இணையத்தளங்களில் இருந்தே தகவல்களை பெற்றுக் கொள்கின்றனர். இவற்றின் மூலம் இலங்கை தொடர்பாக தவறான எண்ணத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ந-8-11)

## ஐ.நாவின் தலையீட்டை...

குழுவினர் இலங்கை வருவதைத் தடுக்கும் நோக்கிலும் பெரும்பான்மை சிங்கள மக்களின் பிரதிநிதித்துவம் கொண்ட அமைப்பை உருவாக்க அரசு தயாராகி வருவதாகத் தெரிய வருகின்றது.

இதில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களையும் இணைத்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை வருவதை அல்லது இலங்கை விவகாரங்களில் தலையிடுவதைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

இதுதொடர்பில் சரத் பொன்சேகாவுடன் அரசின் உயர் மட்டத்தைச் சேர்ந்தவர்கள் இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள்மேலும்தெரிவிக்கின்றன. (ந-8;11)


A/L 2012 ➡ August ஐ நோக்கி .......

A/L 2012

பொருளியல் கருத்தரங்கு

DMI

S.S. சிறி

- 10 வெளியீடுகள் வழங்கப்படும் (பல்தேர்வு வினாக்கள், கட்டமைப்பு, கட்டுரை வணிக வினாக்கள் (விடைகளுடன்))
- தொண்டமனாறு பரீட்சைக்கமைய நேர அட்டவணை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- இன்று முதல் பதிவுகளை மேற்கொள்ளலாம் [1.6.2012 தொடக்கம் 20.6.2012 வரை]
- கருத்தரங்கு 20.6.2012 தொடக்கம் 15.7.2012 வரை இடம் பெறும்.

(C-116)



யாழ் நகரில் .....
உங்கள் அனைத்து வைத்திய சேவைகளுக்கும் ......

சாந்தம் வைத்தியசாலை

வெளிநோயாளர் பிரிவு (OPD)
உள்நோயாளர் பிரிவு (IPD)
ஆய்வுகூட வசதி (Laboratory)
சகல இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனைகளும் உடனடியாகச் செய்து கொள்ளலாம்!

ECG, Scanning வசதி
Home Visit நடமாட முடியாத நோயாளர்களுக்கு வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிக்கப்படும்.

விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை

நீரிழிவு நோயாளர்களுக்கான இலவச ஆலோசனை!
• வெருகிவரைவில் சத்திர சிகிச்சை, மகப்பேற்று விடுதி ஆரம்பம்!

இல. 126, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
021 567 6577


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.